Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/940)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 26 திங்கட்கிழமை (12.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 348



அமைச்சுக்கு மூடுவிழா

08



குழப்பம் கூட்டமைப்புக்குள்

14



பிரச்சினைக்கு தீர்வு - உதயன் எம்.பி

04



ஊழல் கைதிகளை விடேன் ஜெயலலிதா

12

# மனித உரிமையில் முன்னேற்றம் மீண்டும் வலியுறுத்துகிறது கனடா

## பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்றும் இலங்கைக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

மனித உரிமைகள், அரசியல் உரிமைகள் நிலைப்பாட்டில் இலங்கையில் முன்னேற்றம் ஏற்படாவிடில் அடுத்து இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கனேடியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஏனைய நாட்டின் தலைவர்களும் இவ்வாறான நிலைப்பாட்டினையே மேற்கொள்வார்கள் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியளாளர்களுடனான சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணை அவசியம். இலங்கையில் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட்டு நம்பகத்தன்மையும் ஏற்படுத்தப்பட வேண்டும். நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் கோரிக்கைக்கும் கனடா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஐ.நா.கூட்டத் தொடரில் ஜனாதிபதி பங்கேற்பார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகளின் 66ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் செல்லவுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அட்டவணைக்கு அமைய ஜனாதிபதி எதிர்வரும் 23ஆம் திகதி உரையாற்றவுள்ளார். ஐக்கிய நாடுகளின் 65 ஆவது கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவடையும் அதேவேளை, 66 ஆவது பொது அமர்வு நாளை ஆரம்பமாகவுள்ளது.

பாலஸ்தீன பிரச்சினை தொடர்பாக இலங்கை ஆதரவு வழங்கியுள்ள அதே சமயம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தக் கூட்டத் தொடரில் உரையாற்றுவது விசேட அம்சமாகக் கருதப்படுகிறது.

ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் எதிர்வரும் வாரத்தில் நியூயோர்க் செல்லவுள்ளதாக ஏசியன் ரிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

## பயங்கரவாத சட்டத்திற்கு பதிலாக தாய்நாட்டை பாதுகாக்கும் சட்டம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலீடாக தாய்நாட்டை பாதுகாக்கும் சட்டமொன்று அறிமுகம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உள்ளடக்கிய வகையில் புதிய பாதுகாக்கும் சட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது.

தாய்நாட்டை பாதுகாக்கும் சட்டம் அமுல்படுத்தப்படுவதுடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளிட்ட சில சட்டங்கள் வலுவிழக்கும். (15ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் கட்டி முடிக்கப்பட்ட மீனவ நிலையங்கள் இன்று திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிலாவத்தை, கள்ளப்பாடு, மணற்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் கட்டிமுடிக்கப்பட்ட மீனவ நிலையங்களை (Fish landing centres ) கையளிப்பதற்கான வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ன, பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே ஆகியோர் இன்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு மேற்படி மீனவநிலையங்களை கையளிக்கவுள்ளனர். (15ஆம் பக்கம் பார்க்க)

# மனிதாபிமான செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி, சகோதரர்கள் இடையூறு

### அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் மனிதாபிமான செயற்பாடுகளுக்கும் தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது இரு சகோதரர்களும் பாழடித்து வருவதாக அமைச்சர் மகிந்த சரமசிங்க தன்னிடம் தெரிவித்ததாக இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் அமெரிக்க இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பி வைத்த இரகசிய கேபிள் செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களுக்கு வெள்ளையடிப்பதற்காக தான் தன்னுடைய அரசியல் வாழ்வை இழந்துவிட முடியாது எனவும் றொபேர்ட் ஓ பிளேக்கிடம் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விக்கிலீக்ஸின் இந்தக் குறிப்பை லங்கா நியூஸ் வெப் என்ற இணையத்தளம் பெற்று வெளியிட்டிருக்கின்றது. (15ஆம் பக்கம் பார்க்க)

## அழுத்தங்களை முறியடிக்க அரசு கடும் பிரயத்தனம்

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகவுள்ள ஐ. நா.வின் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால், அதனை முறியடிக்கும் வகையில் இராஜதந்திர ரீதியாக ஆதரவைத் திரட்டும் நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் பல நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையின் நன்மதிப்பை மேம்படுத்த முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் ஒரு கட்டமாகவே அண்மையில் பிரதமர் டி.எம். ஜயரட்ன சீனாவிற்கு விஜயம் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆசிய மற்றும் ஏனைய நாடுகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் (15ஆம் பக்கம் பார்க்க)


# கூட்டமைப்பின் சுயநல அரசியலே வன்னிப் பேரழிவுக்கு காரணம்

## இந்துக் கல்லூரியில் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

வன்னிப்போரை நிறுத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு தாம் விடுத்த அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்த காரணத்தினாலேயே எமது மக்கள் விலைமதிக்க முடியாத உயிர் உடமைகளை இழக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். யாழ்ப்பாணம இந்துக் கல்லூரியில் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே (15ஆம் பக்கம் பார்க்க)



தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத் தேர் உற்சவம் நேற்று நடைபெற்றது. வேற்பெருமான் தேரேறி அடியார்களுக்கு அருள்பாலிப்பதனைக் காணலாம்.

# வடக்கு பாடசாலைகளில் பொலிஸ் முறைப்பாட்டுப் பெட்டி

## சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க புதிய உபாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் பொலிஸ் முறைப்பாட்டுப் பெட்டிகளை வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரும் யாழ். பதில் பொலிஸ் மா அதிபருமான நீல் தலுவத்த தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பகுதியில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையேயான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த நிலையிலேயே இந்த இரு மாவட்டங்களிலுமுள்ள பாடசாலைகளில் பொலிஸ் முறைப்பாட்டுப் பெட்டிகளை வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் இவ்வாறு முறைப்பாட்டுப் பெட்டிகளை வைக்கும்போது பாதிக்கப்பட்ட மாணவர்கள் முறைப்பாடுகளை செய்ய முடிவதுடன், அவர்களை இத்தகைய துஷ்பிரயோக நடவடிக்கைகளிலிருந்தும் பாதுகாக்க முடியுமெனவும் நீல் தலுவத்த குறிப்பிட்டுள்ளார்.

# ஊசி உடைந்து வயிற்றுக்குள் சென்ற இலங்கைப் பெண் நாடு திரும்பினார்



(கொழும்பு)

சவூதி அரேபியாவில் பணிபுரியச் சென்ற இலங்கைப் பெண்ணொருவர் ஆடை தைத்துக்கொண்டிருந்தபோது வாயில் வைத்திருந்த ஊசி இரண்டாக உடைந்து ஊசியின் ஒரு பகுதி வயிற்றுக்குள் சென்ற நிலையில் இலங்கைக்குத் திரும்பியுள்ளார்.

மட்டக்களப்பை சேர்ந்த சுப்ரமணியம் டயானா என்பவரே இவ்வாறு நேற்று இலங்கை திரும்பியுள்ளார்.

அவர் சவூதி அரேபியாவுக்குச் சென்று இரு மாதங்களே கடந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவருக்கு சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என மருத்துவர்கள் கூறியபோதிலும் தான் தாயகம் திரும்பத் தீர்மானித்ததாக டயானா கூறினார்.

வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்லும் பெண்களின் தொகை தற்போது அதிகரித்துக் காண ்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# குப்பிவிளக்கு வீழ்ந்ததில் யுவதி எரிகாயமடைந்தார்

(யாழ்ப்பாணம்)

குப்பி விளக்கு தவறி வீழ்ந்ததில் யுவதி ஒருவர் எரிகாயங்களுக்குள்ளானார். நேற்றுமுன்தினம் இரவு வல்வெட்டித்துறை, பொலிகண்டிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இராசம டிலக்சனா (வயது 17) என்ற யுவதியே படுக்கையின்போது குப்பி விளக்கு தட்டுப்பட்டதன் காரணமாக எரிகாயங்களுக்குள்ளானார்.

இவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)



அவுஸ்திரேலியாவுக்கு படகுமூலம் சென்ற வேளை கல்முனை கடற்பகுதியில் வைத்து இலங்கை கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டவர்களைக் காணலாம்.

# வரலாறு காணாத பக்தர்கள் புடைசூழ சந்நிதியான் தேரில் ஆரோகணம்

(தும்பளை)

வரலாற்று பிரசித்திபெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்றுக்காலை வெகுசிறப்பாக நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான முருக அடியார்களுக்கு மத்தியில் சந்நிதி வேலன் தேரேறிவந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

அடியார்கள் பலர் கற்பூரச் சட்டி எடுத்தும், அங்கப்பிரதட்சணம் மற்றும் காவடிகள் எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களை பக்திபூர்வமாக நிறைவேற்றினர்.

நேற்றுக் காலை முதல் செல்வச்சந்நிதி ஆலயத்தைச் சூழவுள்ள இடங்களிலிருந்தும் நெடுந்தொலைவிலுள்ள பிற ஆலயங்களிலிருந்தும்கூட பறவைக்காவடி, தூக்குக்காவடி, பாற்காவடி என பெருந்தொகையான பக்த அடியார்கள் ஆலயத்தை நோக்கி வந்து தரிசனம் செய்தனர்.

நேற்று அதிகாலை முதலே பருத்தித்துறை சாலையிலிருந்து இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளும், வடமராட்சி தனியார் சிற்றூர்தி சேவை பேருந்துகளும், யாழ்ப்பாணத்தின் பிற இடங்களிலுள்ள பேருந்து சேவைகளும் ஆலய தேர்த்திருவிழாவிற்காக விசேட போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தன.

தொலைவிலிருந்து வரும் பக்த அடியார்களது நன்மை கருதியும் தாகசாந்தி நிலையங்களை ஆலயத்திற்கு அருகிலுள்ள பாடசாலைகள் மற்றும் சனசமூக நிலையங்கள் உட்பட தொண்டு நிறுவனங்களும் தாகம் தீர்க்கும் பணிகளை செவ்வனே மேற்கொண்டிருந்தன.

எம்முறையும் இல்லாதவாறு இம்முறை ஆலயத்திருவிழாவிற்கு பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் வருகை தந்தமையால் இடம்பெறக்கூடிய குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக விசேட பொலிஸ் பிரிவு மற்றும் சாரணிய மாணவர்கள் உட்பட தொண்டு நிறுவனங்கள் கடமையில் ஈடுபட்டிருந்தன. (லெ)

# தூக்குக்காவடி மிதித்தவர் சறுக்கி வீழ்ந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தூக்குக் காவடி மிதித்த இளைஞர் சறுக்குண்டு வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மதியம் 1.30 மணியளவில் செல்வச்சந்நிதியான் ஆலய சூழல் பகுதியில் தூக்குக் காவடி மிதிக்கும்போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இளவாலை ஆலடிப் பகுதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் கபிலன் (வயது - 23) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.(எஸ்)

## விபத்தில் படுகாயம்

(மாதகல்)

மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மாரீசன்கூடல் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் மாதகல் சகாயபுரம் பகுதியைச் சேர்ந்த சுரேஸ்குமார் (வயது - 30) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## 100 குளங்கள் புனரமைப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள 100 குளங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மூன்று தசாப்த யுத்தம் காரணமாகக் கைவிடப்பட்டிருந்த குளங்கள் இந்த திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருவதாக கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம் ரவீந்திர ஹேவாவித்தாரன தெரிவித்துள்ளார்.

குறித்த மாகாணங்களிலுள்ள மக்களின் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் குளங்கள் புனரமைக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மழையால் சுயஉருவத்தை காட்டும் செப்பனிடப்பட்ட குடாநாட்டு வீதிகள்

(யாழ்ப்பாணம்)

செப்பனிடப்பட்ட வீதிகள் அண்மையில் பெய்த மழையினால் மீண்டும் சேதமடைந்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதனால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும், சில வேளைகளில் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் குற்றம்சாட்டுகின்றனர்.

எனவே இனிவரும் காலங்களிலாவது இவ்வாறான வீதி புனரமைப்பு வேலைகளைத் திட்டமிட்டு நிர்மாணிக்குமாறு கோரிக்கை விடுப்பதுடன், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.


தபால் மூலம் ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month SEPTEMBER 2011 - FEBRUARY 2012

20 வருட அனுபவம்

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு.டி
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

| | | | |
|---|---|---|---|
| ☐ கல்முனை | ☐ புத்தளம் | ☐ யாழ்ப்பாணம் | ☐ ஹட்டன் |
| ☐ மட்டக்களப்பு | ☐ வவுனியா | ☐ கண்டி | ☐ அனுராதபுரம் |
| ☐ திருகோணமலை | ☐ மன்னார் | ☐ கொழும்பு | ☐ நுவரெலியா |

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கை நெறி என்பனவற்றைக் கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு sms செய்து பெற்றுக்கொள்ளலாம். mobile : 0777140844, 0718034848

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co - ordinator
MARUTHUR A.HASSEN (B.Sc psychology, M.Sc psychology,

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR SUPER MARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU - 07
web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 222 2917, 067 367 1749, 067 367 9688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத்திகதி: 28.09.2011

(C/932)

பாலில் வெண்ணை இருக்கிறது என்று கத்தினால் வெண்ணை கிடைக்காது. அதைத் தயிராக்கி கடையவேண்டும். இறைவா இறைவா என்று சொல்வதால் பலனில்லை அவனைக் காணவிரும்பினால் அதற்கேற்ற முயற்சிகளைச் செய்யவேண்டும். --ராமகிருஷ்ணர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## குறைகளை மறைக்கும் வெறுப்பு!

எல்லாமே மாறும் என்பதொன்றுதான் மாற்றமில்லாதது என்பது கார்ல் மார்க்ஸின் பிரபலமான சூத்திரம். அப்படியானால் பகையும் வெறுப்பும் விரோத உணர்வுகளும் கூட மாறிததான் ஆகவேண்டும். இவை மாறாமல் அல்லது இவற்றை நம்மிடமிருந்து அகற்றாமல் நாம் சமனப்பட்ட மனநிலையில் விஷயங்களை அணுகுவது சாத்தியமேயில்லை.

நம் பார்வையில் விரோதிகளாகத் தெரிபவர்கள் எது சொன்னாலும் என்ன செய்தாலும் அது மேலும் மேலும் வெறுப்பை ஏற்படுத்தி விலகலை அதிகரித்துக்கொண்டே இருக்கும். நம்மிடம் மட்டும்தான் முழுச் சரியும் இருக்கிறது, எதிராளிகளிடம இருப்பது முழுக்க முழுக்கப் பிழையே என்கிற முடிவான தீர்மானங்களுடன் நாம் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது. இது யாரையும் அவர்களது தவறுகள் பிழைகளிலிருந்து விடுவிப்பதற்காகச் சொல்வதல்ல, நாம் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான திறப்பைத் தேடிக்கொள்வதற்காகச் சொல்வதே.

எல்லா அன்புமே சரியானதெனச் சொல்ல முடியாதபோது, வெறுப்பு எப்படி நமக்குச் சரியாக முடியும்? ஒருவகையில் படைவீரர்களின் கொலைகளும் கூட அன்பின் காரணமாகச் செய்யப்படுபவை அல்லவா? அதாவது தேசத்தின் மீது கொண்ட அன்பினால்தான் நான் கொலைகள் செய்கிறேன் என்கிற விளக்கம் அந்தப் படைவீரனிடம் இருக்கக் கூடும். தமிழ் மக்களின் மீதுள்ள ஆற்றா நேசமே தமிழர்கள் அல்லாதவர்கள் மீது குரோதமாகப் பாய்வதையும் நாம் எப்படி மறுத்திட முடியும்?

மக்கள் படும் கஷ்டங்களை நீக்குவதற்காக, எங்களது எந்தவொரு வீம்பையும் விட்டுக்கொடுக்கத் தயாரில்லாத மனநிலையானது, மேட்டுக்குடி சுயலாப அரசியலில் திளைப்பதற்கே உரியதல்லவா? போரினால் இழந்தவைகளை மீளப் பெற்றுத் தங்கள் இயல்பு வாழ்வை அடைந்துவிட முடியுமா என்ற ஏக்கத்துடன் உலைபவர்களுக்கு இந்த மனநிலையால் ஏது செய்து ஆற்ற முடியும்? அவர்கள் சுமக்க நேரிட்ட கஷ்டங்களினால் மக்களுக்கு உண்டான விரக்தியையும் கோபத்தையும் வெறுப்பையும் தவறான வழியில் அரசியலாக்கிப் பிழைப்பது கேவலமில்லையா?

சிங்கள அரசுக்குச் சவால் விட்டபடி, அவர்களைப் பணிய வைக்கும் காலத்திற்காகக் காத்திருக்க, போருக்குத் தப்பி உலகெங்கும் ஓடியோ உள்ளூரில் சுழித்தோ 'வாழ்ந்திருக்க' முடிந்த சிலருக்கு முடியுமாக இருக்கலாம். ஆனால், போருக்குள் சிக்கவைக்கப்பட்டு நொந்தலையும் சாதாரண மக்களுக்கு இன்றைய உடனடித் தேவைகளே பெரும் ஏக்கமாக இருக்கையில், யாருடைய வாழ்வை அழித்து யார் வீம்பு கொள்வது?

நாம் மீள்வதற்கான வழிகளை அடைத்தபடியே சுயவிருப்ப வீம்பு அரசியலைத் தொடர்ந்து நடத்தும் வீரப் பாவனைகளை இனி நாம் நிறுத்தவேண்டும். புண்பட்ட மனங்கள் வெறுப்பை எளிதில் வாங்கிக்கொள்கின்றன. செயற்கையான வீராவேசப் பேச்சுத் துப்பல்களில் மயங்கி சமூகம் பிழையான திசையில் இழுத்துச் செல்லப்பட அனுமதித்தோம். விளைவை அனுபவித்தோம். ஆவேசத்தால் அழிவுகளை உருவாக்கிப் பின் அந்த அழிவுகளால் ஆவேசத்தை வளர்த்து மேலும் மிகையழிவு தேடி... என்னும் இந்தச் சுழலிலிருந்து இனி நாம் விடுபடவேண்டும்.

வெறுப்பில் இருந்து ஆக்கபூர்வமாக எதுவும் உருவாகாது. அது உடனடியாக வன்முறை அரசியலாளர்களின் கைக்கு ஆயுதமாகச் சென்றுவிடும். பிறகு அதிலிருந்து மீள்வதற்கான போராட்டமே மிகக் கடுமையானதாக மாறிவிடும். அரசியல் தேவைகளுக்காக உருவாக்கி வளர்க்கப்படும் வெறுப்பு, வரலாற்றில் மிகப்பெரிய விலையை நம்மிடம் கோரும் என்பதும் நாம் அறிந்த பாடம்.

வெறுப்பு, நமது குறைகளை நாம் காணமுடியாதபடி மறைத்துவிடுகிறது. முதலில் நம் குறைகளை இனங்கண்டு களைவதன் மூலமே நம்மை நீதியுள்ள சமூகமாக்கிக் கொள்ள முடியும்; அதுவே நாம் வெற்றி பெறுவதற்கான, வாழ்வதற்கான வழிக்கு இட்டுச் செல்லும். - ஆசிரியர்

# வடபகுதி கைத்தொழில் அபிவிருத்தியில் இளைஞர் யுவதிகள் பங்கேற்க வேண்டும்

## அமைச்சர் ரிஷாட் பதியுதீன்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடபகுதியில் முன்னெடுக்கும் நற்பணிக்கு கைகொடுக்கின்றவர்களாக இளைஞர் யுவதிகள் மாறவேண்டும் என்று கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிஷாட் பதியுதீன் வேண்டுகோள விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ் இந்துக் கல்லூரியில் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற திவிநெகும கண்காட்சியில் முதல் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவா இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்.குடா நாட்டில் வேலையற்று இருக்கும் பெருமளவு இளைஞர், யுவதிகளின் வாழ்விற்கு வழிகாட்டும் விதத்தில அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு திவிநெகும என்ற திட்டத்தை யாழ்.குடாநாட்டில் அமுல்படுத்தியுள்ளது

ஆரம்பத்தில் புலிகளின் தலைமையுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையைத் தீர்க்க முயற்சி செய்துவந்தார். ஆனால் அது தட்டிக் கழிக்கப்பட்டதன் விளைவால் யுத்தம் நீடித்து மக்கள் பாதிக்கப்பட்டனர்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டுள்ள ஜனாதிபதி மேற்கொள்ளும் நல்ல திட்டங்களை குழப்பும் விதத்தில் சில கட்சியினர் சின்ன சின்ன பிரச்சினைகளை பெரும் பிரச்சினைகளாக உருவாக்கிவிட்டுப் பார்க்கின்றனர். 30 வருடங்களாக நாங்கள் யுத்தத்தின் மூலம் அனுபவித்த துன்பங்கள் துயரங்கள் போதும் இனியும் நாங்கள் அதனை அனுபவிக்கப் போகின்றோமா? எனவும் கேள்வியெழுப்பினார்.(பா)

# இராணுவ ஆட்சியை ஏற்படுத்தவே கிறிஸ் பூதம் என்ற ஒரு நாடகம்

## மன்னார் ஆயர்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களையும்விட மிகமோசமான வகையில அரசாங்கம் அம்மக்களிடம் நடந்து கொள்கிறது. அதற்காகவே கிறிஸ் பூதத்தை உருவாக்கி தமிழ் மக்களை தொடர்ந்தும் கஷ்டங்களுக்குள் சிக்கவைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.

நாட்டுக்குள் இராணுவ ஆட்சியைக் கொண்டுவர விரும்பும் இந்த அரசாங்கம், அதற்காக பாதுகாப்பு தரப்பினரையே பயன்படுத்தி வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் வாழும் அப்பாவித் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அச் சத்துக்குள் தள்ளப்பார்க்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்:

தமிழ்,முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சியாகவே இந்த கிறிஸ் மனிதர் பிரச்சினை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் அரசாங்கம் மௌனம் சாதிப்பது சந்தேகத்துக்கு வழிவகுக்கிறது. இந்தப் பிரச்சினை மிகவும் சிறிய விடயமாகும். இதற்கு தீர்வுகாண அரசால் முடியும். அதற்கு அரசாங்கத்துக்கு வெகுநேரம் ஆகப் போவதில்லை. ஆனால் அரசாங்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதில் தள்ளியே நிற்கிறது.

இதன்மூலம், தனக்கும் கிறிஸ் மனிதன் பிரச்சினைக்கும் தொடர்பு உள்ளது என்பதை அரசாங்கம் நிஷரூபித்து வருகின்றது. அவ்வாறு தொடர்பு இல்லை என்றால், பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடி இதற்குத் தீர்வு காண அரசாங்கம் முயற்சித்திருக்கும்.

ஆனால் அப்படிச் செய்யவில்லை. திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இந்த சிறிய பிரச்சினையிலிருந்து பாரியதொரு நடவடிக்கையை நோக்கிப் பயணிக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதற்காகவே பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்தி, கிறிஸ் மனிதர்கள் என மக்களால் பிடிக்கப்படும் பாதுகாப்பு தரப்பினரையும் காப்பாற்றி வருகின்றது என்றார்.

# மத்திய, மா்காண ரீதியில் அதிகாரப் பகிர்வு அவசியம்

## அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண

(கொழும்பு)

தமிழ் பிரதிநிதிகளுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என விஞ்ஞான அமைச்ச்ர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார். மத்திய மற்றும் மாகாண ரீதியில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி யதார்த்தமாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினை அமைக்க முனைப்பு காட்டி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். காலத்தைக் கடத்தும் மற்றுமொரு முயற்சியாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினை நோக்கக் கூடாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நேர்மைத் தன்மையில் தமக்கு ஐயம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டி சர்வ கட்சிப் பேரவையின் இறுதித் தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்தத் தயார் என்றே ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

கூட்டமைப்பு அரசாங்கங்களில் பல்வேறு நிலைப்பாடுகள் காணப்படுவது வழமையாகும், இவற்றை பொருட்டாகக் கருதாது தீர்வுத்திட்டம் நோக்கி முன்நகர வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வித்தியாசமான சக்திகள் அங்கம் வகிக்கின்றன. எனினும், பெரும்பான்மையானவர்கள் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடாத்துவதற்கு நாட்டம் காட்டி வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில தரப்பினர் விடுதலைப் புலிகளின் நிழல்களாக செயற்பட்டவர்கள் என்பதனை அனைவரும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டிய அவர் எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில கருத்துக்களைக் கேட்டு அதிருப்தி அடையத் தேவையில்லை எனவும் தொடர்ச்சியாக பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை மீனவர்கள் இந்தியாவில் விடுதலை

(கொழும்பு)

இந்தியக் கடற்பரப்பில் எல்லைப் பாதுகாப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 41 இலங்கை மீனவர்களுள் 35 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட போது மீனவர்களின் 8 படகுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. இந்நிலையில் விடுதலை செய்யப்பட்ட மீனவர்களுடன் 7 படகுகள் விடுவிக்கப்பட்டுள்ளது.

குறித்த படகுகளுள் ஒன்றின் உரிமையாளர் தாக்கல் செய்த மேன்முறையீட்டை அடுத்தே மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டதுடன் படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை நீதிமன்றம் இவர்களை விடுவித்தபோதும் இந்திய அரசு இவர்களை இந்தியாவிலிருந்து விடுவிப்பதற்கான அறிவித்தலை இன்னமும் விடுவிக்கவில்லை என இலங்கை மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு அறிவித்துள்ளது. அவ்வாறு இந்திய அரசு அறிவித்ததும் அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# காரைநகர் மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு!

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்

(யாழ்ப்பாணம்

காரைநகர் பிரதேசத்திற்கான குடிநீர்ப் பிரச்சினை வெகு விரைவில் எம்மால் பூர்த்தி செய்யப்படும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.



காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தோப்புக்காடு கிராமத்தில் யு.என்.டி.பி. நிறுவன அனுசரணையுடன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் தொழில் முயற்சி உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் காரைநகர் தோப்புக்காடு முருகன் ஆலய சூழலில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் இப்பிரதேசத்தை வளம் கொழிக்கும் ஒரு பிரதேசமாக மாற்றியமைக்க எம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இப்பிரதேசத்தில் நீண்ட காலமாக நிலவுகின்ற குடிநீர்ப் பிரச்சினை வெகுவிரைவில் எம்மால் பூர்த்தி செய்துதரப்படும்.

இவ் உதவித் திட்டங்களை சரியான வகையில் பயன்படுத்தி வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற முயல வேண்டும். இவ் உதவித் திட்டங்கள் கிடைக்கப் பெறாதவர்களுக்கு அடுத்தடுத்த கட்டங்களில் இவ் உதவித் திட்டங்கள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வின் கருத்துரைகளை காரைநகர் பிரதேச சபை உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் காரைநகர் அமைப்பாளருமான வீ.கண்ணன் (ரஜனி) யு.என்.டி.பி நிறுவனத்தின் மாவட்ட தலைமை அதிகாரி ஞானகணேசன் தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஜெயராமு உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினார்கள்.

இதேவேளை தோப்புக்காடு கிராமத்தில் இரண்டாம் கட்டமாக 08 மரவள்ளங்களும் 05 பயனாளிகளுக்கு சிறுவியாபாரம் செய்வதற்கான நிதியுதவியும் 20 பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பிற்கான உதவிகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு நீதிமன்றம் தண்டம் விதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையுடனும் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் மதுபோதையில் சென்ற நபருக்கு 5ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் அபராதத்தை செலுத்தத் தவறின் 1மாத சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

இதேவேளை மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி சென்ற நபருக்கு 7ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன் செலுத்தத் தவறின் 2 மாத சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (கே)

# காணிப்பிரச்சினை தீர்வுக்கு கிராமமட்ட விசேட சேவை

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலக பிரிவின் காணிப்பகுதியினரால் காணி தொடர்பான விசேட சேவையொன்று கிராமமட்ட ரீதியாக இடம்பெற்றுவருகின்றன.

இதன் பிரகாரம் இன்று திங்கட்கிழமை வட்டக்கச்சிப் பிரதேசத்திலுள்ள சுவிஸ் சென்ரறிலும், நாளை பொன்நகர், தொண்டமான்நகர் ஆகிய கிராமங்களிலும், 15ஆம் திகதி வியாழக்கிழமை திருநகர் வடக்கு, திருநகர் தெற்கு ஆகிய கிராமங்களிலும் நடைபெறவுள்ளது.

16ஆம் திகதி கனகபுரம், கிளிநொச்சி நகரம், ஆகிய கிராமங்களிலும் 19ஆம் திகதி மருதநகர், பன்னங்கண்டி ஆகிய கிராமங்களிலும் 20 ஆம்திகதி பெரிய பரந்தனிலும் நடைபெறவுள்ளது.

இதேவேளை இச்சேவை கடந்த 6,8,9 ஆம் திகதிகளில் அம்பாள்நகர், கனகாம்பிகைக்குளம், ஆனந்தபுரம்.வட்டக்கச்சி, மாயவனூர், இராமநாதபுரம், மாவடியம்மன் ஆகிய கிராமங்களில் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-கே)

# சர்வதேச சமாதானத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையிலான போட்டிகள்

(குருநகர்)

யாழ்-சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகம் சர்வதேச சமாதானத்தை ஒட்டி எதிர்வரும் 15ஆம்திகதி வியாழக்கிழமையிலிருந்து 21ஆம் திகதி புதன்கிழமையான ஒரு வாரகாலம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்துச்செயற்பட இருப்பதாக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சுஜாத்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா, மன்னார், கொழும்பு மாவட்டங்களை உள்ளடக்கி சிறுவர், இளைஞர், சர்வமதக்குழுக்கள் நலன் விரும்பிகள் இணைந்து சமாதானமும் நல்லிணக்கமும் என்னும் தொனிப்பொருளில் 15ஆம் திகதி முதல் 20 திகதிவரை நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவ, மாணவிகளிடையே மேற்படி மாவட்டங்கள் தோறும் வினாடி, வினா, கவிதை, நடனம், ஓவியம் கட்டுரை நாடகப் போட்டிகள் நடத்தி செப்ரெம்பர் 21ஆம் திகதி வவுனியா, தரணிக்குளம், கணேசா வித்தியாலயத்தில் நடைபெற இருக்கும் இறுதிநாள் எழுட்சி விழாவில் வைத்து பரிசளிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிநாள் நிகழ்வில் நிகழ்வுகளில் கலந்து கொண்ட முன் சொன்ன சகல மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ - மாணவிகள் கலந்து வழங்கும் கலை நிகழ்வுகளும் நடைபெறுமென திருமதி சுஜாத்தா மேலும் கூறினார். (68)

# பெண்சாரணியர்களுக்கான நாட்டிய நாடகப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பெண் சாரணியர்களுக்கான நாட்டியம் மற்றும் நாடகப் போட்டிகள் பாடசாலை மட்டங்களில் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பாடசாலைகளில் உள்ள பெண் சாரணியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் 12-17 வயதுக்குட்பட்ட பெண் சாரணியர்கள் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்ட அடிப்படையில் ஊவா மாகாணத்தின் பதுளை, பண்டாரவளை ஆகிய பிரதேசங்களில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை என்.தர்மகுலசிங்கம், வடமாகாண பெண் சாரணியர் ஆணையாளர், 17/10 பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 0777 662039 கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ விபரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (எஸ்)

## யுனிசெவ் நிதியுதவியில் சிறுவர் விளையாட்டு முற்றம்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 3 ஆரம்பப்பிரிவு பாடசாலைகளில் யுனிசெவ்வின் நிதியுதவியுடன் சிறுவர் விளையாட்டு முற்றம் ஒன்று அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் மாந்தை கிழக்கு அம்பாள்புரம் தமிழ் வித்தியாலயம், திருமுருகண்டி இந்து வித்தியாலயம், பனிச்சன்குளம் அ.த.க பாடசாலை, ஆகிய 3 பாடசாலைகளிலேயே இவ் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டுவருகின்றன. (121)

# அபிவிருத்திப் பணிகளுக்கு 4 பாடசாலைகள் தெரிவு

(கிளிநொச்சி)

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 6 அபிவிருத்தி பாடசாலைகளில் இசுறு பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய 4 பாடசாலைகளிலும் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதில் பாண்டியன்குளம் மகாவித்தியாலயம் முத்தையன்கட்டு வலது கரை அ.த.க, யோகபுரம் மகாவித்தி, மாங்குளம் மகா. வித்தியாலயம் ஆகிய 4 பாடசாலைகளிலே அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (121)

# ஒளிராத மின்விளக்குகளினால் இருளில் மூழ்கும் நெல்லியடி நகரம்

(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதிகளில் நீண்டகாலமாக வீதி மின் விளக்குகள் ஒளிராமையால் இரவு வேளைகளில் இந் நகரப் பகுதியால் செல்லும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இப்பகுதிகளில் கடைகள், சந்தைகள் எரிபொருள் நிரப்பு நிலையம் என்பன காணப்படுவதால் நாளாந்தம் அதிகளவு மக்கள் பிரயாணம் செய்யும் பகுதியாக காணப்படுகிறது.

இந்த நிலையில் இங்கு பல வருடங்களாக வீதி மின் விளக்குகள் எதுவும் பொருத்தப்படவில்லை எனத் தெரிவிக்கும் இப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் வெளிச்சமின்றி குறிப்பாக எதிரில் வாகனம் வருவது கூடத் தெரியாத நிலையில் விபத்துககள் ஏற்படும் அபாய நிலையும் காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பிரதேச மக்களின் அவலநிலையக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இப்பகுதிகளிலுள்ள மின் விளக்குகளை ஒளிரச்செய்யமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (உ-18)





இலங்கை பொலிஸ் பிரிவின் 145 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கிளிநொச்சி பொலிஸ் தலைமையக பொலிஸார் நடத்திய இரத்ததான நிகழ்வில் மதகுரு மற்றும் பொலிஸார் இரத்ததானம் செய்வதையும் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மேற்பார்வை செய்வதையும் காணலாம். (77)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(கரணவாய்)

பருத்தித்துறை சுகாதார உத்தியோகத்தர்கள், நெல்லியடி பொலிஸார் ஆகியோர் இணைந்து நெல்லியடி நகரப் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் குறித்த நகரப்பகுதிகளிலுள்ள வீடுகள் மற்றும் கடைகள் இதர இடங்களுக்கு சென்று டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றை 48 மணிநேரத்திற்குள் அகற்றி துப்புரவு செய்யுமாறு அறிவுறுத்திய துடன் டெங்கு ஒழிப்பு தொடர்பான துண்டுப்பிரசுரங்களையும் வழங்கினர். (18)

# யாழ்.மாவட்டத்தில் மாற்றுவலுவுடையோராக 439 சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்

## யாழ்.சிறுவர்கள் செயலக புள்ளிவிபரத் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இவ்வருடம் ஆரம்பம் முதல் ஜூன் மாதம் வரையான 6 மாத காலப்பகுதியில் 439 சிறுவர்கள் மாற்றுவலுவுடையோராக இனங்காணப் பட்டுள்ளனர் என யாழ்.மாவட்டப் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் பிரகாரம் யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மாற்றுவலுடையோராக இனங்காணப் பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் வருமாறு-

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 8 சிறுவர்களும், வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 10 சிறுவர்களும், ஊர்காவற்றுறை பிரிவில் 3 சிறுவர்களும், காரைநகர் பிரிவில் 11 சிறுவர்களும், யாழ்ப்பாணப் பிரிவில் 2 சிறுவர்களும், நல்லூர் பிரிவில் 31 சிறுவர்களும், சண்டிலிப்பாய் பிரிவில் 78 சிறுவர்களும், சங்கானைப் பிரிவில் 25 சிறுவர்களும், உடுவில் பிரிவில் 43 சிறுவர்களும், கோப்பாய் பிரிவில் 34 சிறுவர்களும், சாவகச்சேரி பிரிவில் 66 சிறுவர்களும், கரவெட்டி பிரிவில் 69 சிறுவர்களும், பருத்தித்துறை பிரிவில் 49 சிறுவர்களும், மருதங்கேணி பிரிவில் 10 சிறுவர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் எவரும் மாற்றுவலுவுடையோராக இனங்காணப்படவில்லை என யாழ்.மாவட்ட செயலகத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (உ)

# தேசிய மட்ட போட்டிகள்

(ஒட்டுசுட்டான்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 2011 ஆம் ஆண்டு இளைஞர் விருதுக்காக நடத்தப்படும் தெரிவுப் போட்டியில் ஒட்டுசுட்டான் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான தேசிய மட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவுப் போட்டியில் முதன் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு மன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ, 101)

# பருத்தித்துறை சாலை பேருந்துகள் பழுதடைவதனால் பயணிகள் சிரமம்

(தும்பளை)

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் 750, 764 ஆம் இலக்க இலங்கைப் போக்குவரத்து, பருத்தித்துறைச் சாலைப் பேருந்துகள் இடைநடுவில் அடிக்கடி பழுதடைவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக இப்பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரு பேருந்துச் சேவைகளிலும் பல்கலைக்கழக மாணவர்கள், அரச சேவை உத்தியோகத்தர்கள் எனப் பலர் பயணம் செய்கின்றனர்.

இந்த நிலையில் இப்பேருந்துகள் சேவையில் ஈடுபடும்போது பழுதடைவதால் தாம் காத்திருந்து வேறொரு பேருந்தில் பயணிக்க வேண்டியுள்ளது.

இதனால் உத்தியோகத்தர்கள் கடமைகளுக்குப் பிந்திச் செல்வதுடன், மாணவர்கள் விரிவுரைகளுக்கும் பிந்திச் செல்ல வேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து சீரான போககுவரத்துச் சேவையை ஏற்படுத்தித் தர வேண்டுமெனப் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (62)

# நியமனம்

(கிளிநொச்சி)

துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக க.செல்வரட்ணம் கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் துணுக்காய் வலய குழாமுறிப்பு அ.த.க.பாடசாலை அதிபராகக் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ, 121)

# 83 இலட்சம் ரூபா செலவில் வைத்திய அதிகாரி பணிமனை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கான கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை என்றிப் திட்டத்தின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

துணுக்காய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் இயங்கி வந்த மாந்தை கிழக்கு கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையினைத் தனியாகப் பிரிக்கும் வகையில் என்றிப் திட்டத்தின் கீழ் சுமார் 83 இலட்சம் ரூபா செலவில் இக்கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றது. (உ, கே)

# ஜி.ரி.இசற் நிறுவனத்தால் உபகரணங்கள் கையளிப்பு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி கண்ணகிநகர் கிராமத்தில் கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பங்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை கண்ணகிநகர் கிராமத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

சுமார் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் முதற்கட்டமாக 10 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

மேலும் 170 பயனாளிகளுக்கு இவ் உபகரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் ஏனைய தொழில்களை மேற்கொள்கின்றன மக்களுக்கும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் முகமாக உதவிகளும் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் இதன்போது இப்பிரதிநிதிகள் தெரிவித்தனர். (கே)




இன்னும் இந்தத் தபால்காறனையும் காணேல்ல. இத்தனைக்கும் மற்றும் நாளேல வந்து போயிருப்பான். ஏதும் அந்தரம் ஆத்திரமெண்டால் எல்லாம் உப்புடித்தான். இண்டைக்கெனக் கொரு கடிதம் வரவேணும்.

உந்தத் தபால்காரரும் கடிதங்களை மாத்திக் குடுத்திட்டும் போயிடுவாங்கள். அவங்களுக்கென்ன கிடைக்கிற கடிதங்களை ஆரிட்டை எண்டான்ன குடுத்துத் துலைக்க வேண்டியான்!

அந்தக் காலத்தில இருந்தாங்கள். அச்சொட்டாக அந்தந்த ஆக்களின்ர கடிதங்களை அவையவேட்டை சேப்பிப்பாங்கள். அந்தளவுக்கு அறிமுகமும், அனுபவமும் இருந்ததே. கிராமத்தைச் சேர்ந்த அல்லது கிராமத்தைக் கரைச்சுக் குடிச்ச ஒருவரைத்தான் இந்த வேலேல அந்த நாளிலே நியமிச்ச! அதுகும் இல்லாமல் ஒருவர் ஒரு கிராமத்தில் வேலை செய்தா அவர் பென்சன் எடுக்கும்வரை அல்லது ஆயுள் முடியும் வரை அவர்தான் இருப்பார்.

அப்ப எல்லாரையும் முகவரிக்கு உரிய இடங்களும் அவருக்குத் தண்ணிபட்டபாடுதான். இப்ப ரெண்டு மாதத்துக்கு ஒரு ஆள் மாறி வருகுது. அதோட நம்பர்களும் குளறுபடிதான். ஒரு றோட்டிலேயே இரண்டு நம்பர்கள் ஒரே மாதிரி இருக்கும்.

எனக்கொரு ஞாபகம் கொழும்புக்கு நானனுப்பிய கடிதம் திரும்பி என்னட்டையே வந்து சேர்ந்தது. அதுகும் கொழும்பெல்லாம் திரிஞ்சு களைக்சுப் போய் 15 நாளேல வந்தது.

உப்புடிப் பல புதுமையளும் நடக்கும். சில வேளேல மாத்துப்படுற கடிதங்கள் தெரிஞ்சவை எண்டாக் கொண்டந்து தருவினம். இல்லாட்டில் விசயம் அறிஞ்ச ஆக்களெண்டால் திரும்பவும் ஒரு தபால் பெட்டீல சேத்து விட்டால் மறுநாள் உரியவருக்குப் போய்ச்சேரும்.

சிலதுகள் வாங்கினா கிழிச்செறிஞ்சு போடுங்கள். அதுகள் கிடைக்காத கடிதங்கள் தான். இந்தக் கடிதச் சேவையைக் கண்டறிஞ்சவங்களைப் பாராட்டலாம். இதனால் எத்தனை பேருடைய எத்தனையோ விடயகள் இலகுவில் முடியுது.

அதுவும் அதிகப் பணம் செலவு செய்து காண வேண்டிய வேலைகளை சொற்ப செலவில் முடிச்சிடலாம். இந்த மாதிரிப் புனிதமான, புண்ணியமான வேலைகளை பொறுப்பெடுக்கிறவை அந்தச் சேவையின் தாற்பரியத்தை நன்கறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

ஒருத்தருக்குப் பார்சல் எண்டு வெளிநாட்டில இருந்து வந்ததை கந்தோரால அறிவிக்கும் கடித்தை வாங்கி அவரிடம் ஒப்படைக்காமல் திருப்பிவிட்ட வேலைத்தள நண்பர்களால் தற்செயலாக அக்கந்தோருக்குப்போன போது தெரிய வந்து பார்சலைப் பெற்றுக்கொண்ட அன்பர் என்னிடம் கூறினார்.

இப்படி எத்தின எத்தின பேர்களால் எத்தின எத்தின கடிதங்கள், பார்சல்கள் சிதறடிக்கப்படுகின்றதோ ஆர்கண்ட!

எதுக்கும் தனக்குத் தனக்கு வரக்கேதான் உணருவினை, எட உந்த நான் பாத்துக் கொண்டிருந்த கடித்தைக் கொண்டாறன் கடிதக் காரன்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களுடைய பாதுகாப்பை உறுதிசெய்யும் முகமாக 67 சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் கிளிநொச்சி, கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவிவுகளில் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் பொலிஸார், கிராம அலுவலர், மதப் பெரியார்கள் அங்கம் வகிக்கின்றனர். இதன் மூலம் கிராமங்களில் நடக்கும் சிறிய பிரச்சினைகளுக்கு உடனடியாகவே தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ, கே)

# பூநகரி பகுதி மீனவருக்கு பாஸ் வழங்க நடவடிக்கை

(குருநகர்)

பூநகரி-ஜெயபுரம் நாச்சிக்குடாக் கடல் தொழிலாளர்களுக்கும் 'பாஸ்' பெற்று கடலுக்குச் செல்லும் நடைமுறை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை அன்னைவேளாங்கன்னி, அன்புபுரம் மற்றும் யாகப்பர், இரணைமாநாகர் கடல்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஜெயபுரம், கூட்டுறவுக் கடற்றொழில் சமாசம் செய்து வருகின்றது.

அதன் முதற்கட்டமாக கடற்றொழிலாளர்கள் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு மேற்படி சங்கங்கள் ஊடாகச் சமாசம் பதிவுகளைச் செய்து முடித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இரணைதீவு கடற்றொழிலாளர்களும் ஜெயபுரம் நாச்சிக்குடாப் பிரதேசத்தில் கடந்த அனர்த்த காலங்களில் இடம்பெயர்நது வாழ்ந்து வருவதால் இரணைதீவில் மீளக்குடியமர அவர்கள் முயற்சியில் ஈடுபட்டு உள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (68)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(12.09.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆவணி 26 ஆம் நாள்.
இராகுகாலம் 07.33–09.03, சுபநேரம் 12.03 –1.33,
நட்சத்திரம்: பூரட்டாதி முழுவதும்
திதி: பூரணை பி.ப. 3–13 வரை
உமாமகேஸ்வரர் விரதம் – பூரணை விரதம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக்கஷ்டம், காரியத்தடை, தொழில் நட்டம், தேகநலம் பாதிப்பு, கடவுள் வழிபாடு.

ரிஷபம:– காரியசித்தி, பணம்வரும், வீணான கோபம், குடும்பத்தில் நிம்மதி, தேக ஆரோக்கியம்.

மிதுனம் :– பணக்கஷ்டம், தொழில் நட்டம், மருத்துவச் செலவு, தேகநலன் பாதிப்பு. தெய்வதரிசனம்.

கடகம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், உறவினர் தொல்லை, தேக ஆரோக்கியம், காரிய சித்தி.

சிம்மம்:–பணக்கஷ்டம், தொழில் நட்டம், காரியத் தடை, குடும்பத்தில் குழப்பம், நண்பர் வருகை.

கனனி :– குடும்பத்தில் நிம்மதி, பணம் வரும், மனமகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், இனசன அழைப்பு.

துலாம் :– பணக்கஷ்டம், தேகநலக் குறைவு, மருத்துவச் செலவு, சுற்றத்தார் ஆதரவு, வீண் அலைச்சல்.

விருச்சிகம்:– குடும்பத்தில் குதூகலம், பணம்வரும், நண்பர் வருகை, பிணக்குத் தீர்தல், ஆத்திரப்படல்.

தனுசு:– பணக்கஷ்டம், அதிகாரப் போட்டி, உடல்நலக்குறை, மருத்துவச் செலவு, தொழில் நட்டம்.

மகரம:– தொழில் நட்டம், பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, தேக நலம் பாதிப்பு, மனச்சஞ்சலம்.

கும்பம் :– பணம்வரும், தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, வெளிநாட்டு உதவி, கடவுள் வழிபாடு

மீனம்:– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு, மனச்சஞ்சலம், வீண் அலைச்சல்.

# கே.சீ.சீ.சீ. கிரிக்கெட் தொடர் காலிறுதிக்கு பரீஸ் அணி தகுதி

(யாழ்ப்பாணம்)

கே.சீ.சீ.சீ. வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு மானிப்பாய் பரீஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

கே.சீ.சீ.சீ. விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடாத்தி வரும் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணியும், சென்றலைட்ஸ் அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி 19.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வினோத்குமார் 10, ஜேம்ஸ் ஜானசன் 13, ஜனோஸன் 23, பிரசாத் 31, நிசாந்தன் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய மானிப்பாய் பரீஸ் அணி 29.3 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நிதர்சன் 10, சுபதீபன் 36, திலக் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சாள்ஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி வெற்றிபெற்றதன் மூலம் காலிறுதிப்போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது. (07)

## ஈகிள்ஸை வென்றது கே.சீ.சீ.சீ.

(யாழ்ப்பாணம்)

அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் ஈகிள்ஸ் அணியை இரண்டு விக்கெட்டுக்களால் கே.சீ.சீ.சீ. அணி வெற்றிபெற்றது. யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்பட்டு வரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் மூன்றாவது போட்டி கடந்த 10ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடை பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஈகிள்ஸ் அணி, 47.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அனுருத்திரன் 72, மனோபவன் 30, சன்ஜீவன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீஸ் மூன்று, சுஜீந்திரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு ஆடிய கே.சீ.சீ.சீ. அணி 40 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் உமாநாத் 67, ஆதித்தன் 37, கிருபவன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமாசுதன் மூன்று, ஆசிக் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (07)

## ஐந்து ஓவர் கிரிக்கெட் தொடர் அரையிறுதியில் விவேகானந்தா

(தும்பளை)

டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் ஐந்து ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு விவேகாந்தா அணி தகுதி பெற்றுள்ளது.

டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் கிரிக்கெட் டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் தும்பளை விவேகானந்தா அணியும், கொலின்ஸ் அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று விவேகானந்தா அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கொலின்ஸ் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய விவேகானந்தா அணி 4.5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் துளசிமாறன் 46 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தார்.

இவ்வெற்றியின் மூலம் விவேகானந்தா அணி அரையிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது. (62)

## டி.எஸ். சேனநாயக்கா மகாவித்தியாலயத்தை 5 விக்கெட்டால் வென்றது கொக்குவில் இந்து

(யாழ்ப்பாணம்)

டி.எஸ். சேனநாயக்க மகாவித்தியாலய அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ஐந்து விக்கெட்டுக்களால் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் இரு பாடசாலைகளினதும் 17 வயதுப் பிரிவு அணி களுக்கிடையிலான போட்டி ஒன்று அண்மையில் டி.எஸ். சேனநாயக்கா மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய டி.எஸ். சேனநாயக்கா மகாவித்தியாலய அணி 23.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதில் சுபன் 24, ஜெகன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்ட சிலோஜன், லிங்கநாதன் தலா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 14.3 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சிலோஜன் 22, லிங்கநாதன் 14, கீர்த்திகன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெகன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (07)

## 3ஆம் இடத்திற்கான மோதல் இன்று

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினர் நடத்தும் ஹொக்கி சுற்றுப் போட்டியின் மூன்றாமிடத்திற்கான ஆட்டம் இன்று பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் ஸ்ரார் அணியும், சென் ஜோன்ஸ் கல்லூரி அணியும் இன்றைய தினம் மோதவுள்ளனர்.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். பல்கலைக்கழக அணியும் கிறாஸ்ஹொப்பர்ஸ் அணியும் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும், இன்றைய மூன்றாமிடத்திற்கான போட்டியில் மோதவுள்ள இரு அணிகளையும் குறித்த நேரத்திற்கு சமூகமளிக்குமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

## விபத்தில் சிக்கிய அசார் மகன் கவலைக்கிடமான நிலையில்

(ஹைதராபாத்)

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அசாருத்தீனின் இளைய மகன் அயாஸுத்தீன் நேற்றுக் காலை நடந்த சாலை விபத்தில் படுகாயமடைந்து கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அசாருத்தீனின் மூத்த மனைவிக்கு இரண்டு மகன்கள்.

அசாதுத்தீன் மற்றும் அயாஸுத்தீன்(18). அயாஸுத்தீன் தனது நண்பர் அப்ஸலுடன் ஹைதராபாத் அவுட்டர் ரிங் ரோட்டில் பைக்கில் படுவேகமாகச் சென்றுள்ளனர். ரங்கா ரெட்டி மாவட்டத்தில் உள்ள புப்புலகுடாவில் அவர்கள் பைக் சறுக்கியதில் இருவரும் படுகாயம் அடைந்தனர். உடனே அவர்களை அப்போலோ மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு அயாஸுத்தீன் கவலைக்கிடமான நிலையிலில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு வென்டிலேட்டர் மூலம் செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டு வருவதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். மகன் விபத்தில் சிக்கிய செய்தி கிடைத்ததும் அசாருத்தீன் லண்டனிலிருந்து ஹைதராபாத் விரைந்துள்ளார். அயாஸுத்தீன் தந்தை வழியில் கிரிக்கெட் வீரர் ஆக பயிற்சி மேற்கொண்டு வந்தார். பள்ளிக் கிரிக்கெட் அணியில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## இலங்கை இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட் இழப்பிற்கு 223



(கொழும்பு)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் 2 ஆவது இனிங்ஸில் விளையாடிவரும் இலங்கை அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவடைந்த வேளை 2 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தனது முதல் இனிங்ஸில் 7 விக்கெட் இழப்பிற்கு 411 ஓட்டங்களைப் பெற்று அவுஸ்ரேலிய அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது. இந்தநிலையில் நேற்றைய தினம் தனது 2 ஆவது இனிங்ஸை இலங்கை அணி ஆடத் தொடங்கியது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான பரணவிதான, டில்ஷான் இருவரும் முறையே 55, 36 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். களத்தில் சங்ககார 69, ஜெயவர்த்தன 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர்.

பந்து வீச்சில் ஹரிஸ், ஹசி இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

## தொடரை வென்றது பாகிஸ்தான்




பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டியில் 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி தொடரைக் கைப்பற்றியது.

நேற்று நடைபெற்ற 2ஆவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக மசகட் 68, ரெயிலர் 50, தைபு 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தன்வீர் 2, கான் மற்றும் சீமா இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 226 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 42.1 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 228 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியது.

அவ்வணியின் ஹபீஸ் 139, பர்கத் 75 ஓட்டங்களைப் பெற்றதுடன் ஹபீஸ் ஆட்டநாயகனாக தெரிவானார்.

## தேசிய மட்ட படகோட்டம்



(கொழும்பு)

தேசிய மட்டத்திலான படகோட்டப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிவரை பொல்கொட வாவியில் இடம்பெறவுள்ளது.

இலங்கை படகோட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போட்டித் தொடரில் இலங்கை இராணுவம், கடற்படை, வான்படை, பல்கலைக்கழகங்கள், தேசிய மற்றும் சர்வதேச பாடசாலை அணிகள் படகோட்டக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

இதன்படி 16 வயதுக்கு மேற்பட்டோர், 19 வயதுக்குட்பட்டோர், அதற்கு மேற்பட்டோர் என பல்வேறு வயதெல்லைகளில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

2 ஆயிரம் மீற்றர் அளவில் 4 படகு அணிகள் பங்குபெறும் வகையில் சர்வதேசத் தரத்தில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

திறந்த மட்டப் போட்டியில் தேசிய படகோட்ட வெற்றியாளர் அறிவிக்கப்படுவார்.

இதேவேளை 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இலக்காகக் கொண்டு சிறந்த தேசிய மட்ட அணியை உருவாக்குவதே இந்த ஆண்டு படகோட்டப் போட்டிகளின் நோக்கம் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சகல விளையாட்டுப் போட்டிகளிலும் இளைஞர், யுவதிகளுக்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவுமே இப்போட்டித் தொடர் நடத்தத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# அமெரிக்கன் ஓப்பன் ரெனிஸ் நடால், ஜோகோவிச் பலப்பரீட்சை

(நியூயோர்க்)


அமெரிக்கன் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் இறுதிப் போட்டியில் ரபேல் நடால், ஜோகோவிச் பலப பரீட்சையில் ஈடுபடவுள்ளனர். அத்துடன் பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டிக்கு செரீனா வில்லியம்ஸ் தகுதி பெற்றுள்ளார்.

ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்கன் ஓப்பன் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடாலும், இங்கிலாந்தின் முர்ரேயும் மோதினர். விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் 6-4, 6-2, 3-6, 63 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்ற நடால் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றுக் கொண்டார்.


சுமார் மூன்றரை மணித்தியலாயங்கள் வரை நடைபெற்ற இப்போட்டி ரென்னிஸ் ரசிகர்களுக்கு மிகுந்த உற்சகத்தை ஏற்படுத்தியிருந்தது.

இப்போட்டியுடன் நான்கு முறை முர்ரேயை எதிர்கொண்ட நடால் அந்த நான்கு போட்டிகளிலும் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மற்றுமொறு அரையிறுதி ஆட்டத்தல் முதல் நிலை வீரரான ஜோகோவிச் 6-7,4-6,6-3,6-2,7-5 என்ற செட் கணக்கில் பெடரரை தோற்கடித்து இறுதிக்குள் நுழைந்தார்.

இதேவேளை, நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம் மற்றும் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி மோதினர். இப்போட்டியில் சிறப்பபான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய செரீனா வில்லியம் 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.



# எண்ணமில்லை




ஆர்ஜன்டீன அணிக்கு மீண்டும் பயிற்சியாளராகப் பொறுப்பேற்கும் எண்ணம் எனக்கு இல்லையென அந்த அணியின் முன்னாள் கால்பந்து நட்சத்திரம் மரடோனா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு பயிற்சியாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் ஆர்ஜன்டீனா அணி விளையாடிய் எந்த ஒரு போட்டியையும் பார்க்கவில்லை, மீண்டும் பயிற்சியாளராகப் பொறுப்பேற்கவும் விரும்பவில்லை. அணி நிர்வாகம் அதைப் பற்றிச் சிந்திக்கும் இடத்தில் அது குறித்து பரிசீலிப்பேன்.

நான் எங்கு சென்றாலும் என் ஆதரவு ஆர்ஜன்டீன அணிக்குத்தான். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. நான் இன்று புகழுடன் இருப்பதற்கு ஆர்ஜன்டீனாவே அடிப்படைக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

# பதற்றமான சூழ்நிலையை சிறப்பாகக் கையாண்டோம்



(லண்டன்)

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில், எங்களுடைய வீரர்கள் பதற்றமான சூழ்நிலையை சிறப்பான முறையில் கையாண்டதன் மூலமே வெற்றி பெற முடிந்தது என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான போட்டியில், எங்கள் அணியினர் பதற்றமான சூழ்நிலையை நன்கு கையாண்டனர். ரவி போபரா நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர் பிரஸ்னன் உடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தை உருவாக்கினார். ஐந்து விக்கெட் இழப்புக்கு பின் இவர்கள் இருவரும் அணியை எழுச்சிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். மோர்கனுக்குப் பதிலாக அணியில் இணைந்த இவர் தன் திறமையை எடுத்துக் காட்டியுள்ளார். பந்து வீச்சில் கலக்கிய அண்டர்சன் மூன்று முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தியது திருப்புமுனையாக அமைந்தது. இது இவருடைய 150ஆவது ஒரு நாள் போட்டி, இன்னும் நிறையப் போட்டிகளில் பங்கேற்று பல வெற்றிகளைக் குவிக்க வேண்டும்.

இந்திய அணியின், கப்டன் டோனி மற்றும் ரவீந்திர ஜடேஜா இருவரும் சிறப்பாகச் செயற்பட்டனர். சுழற்பந்து வீச்சாளர்கள் அஷ்வின் மற்றும் ஜடேஜா துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிக நெருக்கடி கொடுத்தனர் எனவும் தெரிவித்தார்.

# முதல் 10 ஓவர்களில் அதிக ஓட்டம் தோல்வியடைய இதுவே காரணம்

(லண்டன்)

ஆட்டத்தின் முதல் பத்து ஓவர்கள் அதிகபடியான ஓட்டங்களை விட்டுக் கொடுத்ததே தோல்விக்குக் காரணம் என்று இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.

ஆட்டத்தின் முதல் பத்து ஓவர்கள் மிகவும் முக்கியமானது. அதில் நாங்கள் அதிகபடியான ஓட்டங்களை எதிரணிக்கு விட்டுக் கொடுத்து விட்டோம் அப்படி தொடகத்தில் ஓட்டம் வழங்காமல் இருந்திருந்தால் சுழற்பந்து வீச்சாளர்கள் ஓட்ட விகிதத்தை மேலும் கட்டுப்படுத்தியிருக்க முடியும். இது போன்று நடந்து இருப்பது எங்களுக்கு முதல் முறையல்ல. இதே போன்று வேகப்பந்து வீச்சாளர்கள் சோபிக்க முடியாமல் ஓட்டங்களை வாரி வழங்கியதால் நாங்கள் ஏற்கனவே பாதித்திருக்கிறோம். எதிரணியினர் ஒரு ஓவரில் 6 ஓட்டங்களுக்கு மேல் பெற்றால் ஆட்டம் கடினமாக இருக்கும். தொடக்கத்தில் அதிக ஓட்டம் விட்டுக் கொடுக்காமல் இருந்திருந்தால் இங்கிலாந்து அணியின் கைமேலோங்கி இருக்க முடியாது.



தங்களது ஆட்டத் திறனுக்கு மேல் 100 சதவீத ஆட்டத்தை அளிக்க நமது வீரர்கள் ஆர்வமாக உள்ளனர். நமது வீரர்களின் உத்வேகத்திலும் குறைவு எதுவும் இல்லை. அதிர்ஷ்டம் எங்களுக்கு இந்த நேரத்தில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மனத்தைரியம் அதிகமாக இருக்கிறது. மழையால் பந்து ஈரம் அடைந்ததால் சுழற்பந்து வீச்சாளர்களால் சரியாக பந்தை சுழல வைக்க முடியாது. இது அணிக்கு பாதகமாகும். வேகப்பந்து வீச்சாளர்கள் சரியாகப் பந்து வீசாததால் அவர்கள் வீசிய பந்து துடுப்பாட்ட வீரர்களுக்கு ஏற்றவாறு துடுப்புச் சென்றது எனவும் அவர் தெரிவித்தார்.

# புதுப் பாணியில் பந்து வீச்சு

(புதுடில்லி)



காயத்திலிருந்து குணமடைந்துவிட்டேன். அடுத்து வரும் தொடர் களில் புதிப் பாணியில் எனது பந்து வீச்சு அமையும் என சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

காயம் தவறான நேரத்தில் ஏற்பட்டது. ஆனால் பிரச்சினை அதுவல்ல உள்நாட்டுத் தொடராயினும் வெளிநாட்டுத் தொடராயினும் காயமடைவது பெருத்த ஏமாற்றமே. காயத்தினால் நாடு திரும்புவது என்பது மிகப்பெரிய துயரமாக உள்ளது.


என்னுடைய பந்து வீச்சு குறித்து இது வரை இல்லாத அளவுக்கு நான் சிறப்பாக உணர்கிறேன், இனிவரும் தொடர்கள் எனக்கு மறு ஜென்மம் போல்தான்.

இன்னும் நாட்டிற்காக விளையாட என்னிடம் கிரிக்கெட் ஆட்டம் உள்ளது. இது என்னுடைய புதுத் தொடக்கம். என்னிடம் இன்னும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடக்கூடிய உடற்தகுதியும், திறமையும் உள்ளது எனவும் தெரிவித்தார்.

# தென்கொரியா சம்பியன்


மகளிர் ஆசிய சம்பியன்ஸ் ஹொக்கி போட்டியின் இறுதிப் போட்டியில் சீனாவை வீழ்த்திய தென்கொரியா சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

வெண்கலப் பதக்கத்துக்கான மோதலில் ஜப்பான் அணி இந்தியாவை மூன்றாவது இடம்பிடித்து பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



**போலந்து, ஜேர்மனி அணிகளுக்கிடையிலான நட்பு ரீதியிலான கால்பந்துப் போட்டி போலந்தில் நடைபெற்றது. போட்டி நடந்த ஏரியானா மைதானத்தின் வெளிப்புறத் தோற்றத்தைக் காணலாம். அழகு எழில் கொண்ட இந்த மைதானத்தை விளையாட்டில் ஆர்வமில்லாதவர்களும் பார்வையிட்டுச் செல்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

# கம்பீர் காயம் துரதிர்ஷ்டவசம்



(கொல்கத்தா)

கம்பீர் காயம் அடைந்துள்ளது துரதிர்ஷ்டவசமானது என ஷாருக்கான் தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி 20 போட்டியில் விளையாடுவது பற்றி அவர் தான் முடிவு செய்ய வேண்டும். அவர் எடுக்கும் எந்த முடிவுக்கும் உரிய மதிப்பளிப்போம். விளையாட முடியாவிட்டாலும் மைதானத்திற்கு வந்து சக வீரர்களை உற்சாகப்படுத்துவார். எமது அணி சம்பியன் லீக் தொடரில் வலுவான அணியாகத் திகழும். கம்பீர் இல்லாவிட்டாலும் எமது அணி பலமானதாகவே உள்ளது. இதனை போட்டியின் போது அனைவரும் அறிவார்கள் என எதிர்பார்க்கிறேன் என்றார்.

# தனியார் மருத்துவக் கல்லூரி அனுமதி வழங்குவது சாத்தியமா?

## உயர்கல்வி அமைச்சு ஆராய்கிறது



(கொழும்பு)

மருத்துவப் பட்டம் வழங்குவதற்கான அனுமதியை மேலும் இரண்டு தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு வழங்குவது தொடர்பில் ஆலோசித்து வருவதாகவும், இதுதொடர்பில் இதுவரை இரண்டு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவிக்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் சிலரும் கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த நிபுணத்துவம் வாய்ந்த வைத்திய அதிகாரிகள் சிலரும் இதில் ஒரு விண்ணப்பதாரிகள் என அவர் தெரிவிக்கிறார்.

இதனைத் தவிர கொழும்பு மருத்துவ கல்லூரி பேராசிரியர்களும், நிபுணத்துவம் வாய்ந்த வைத்திய அதிகாரிகளும் மேலும் ஒரு தனியார் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கான திட்ட அறிக்கையை உயர் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ளனர்.

இந்தக் கல்லூரிகளை ஆரம்பித்து அவற்றின் ஊடாக மருத்துவப் பட்டங்களை வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக அமைச்சர் மேலும் தெரிவிக்கிறார்.

# உயர்பாதுகாப்பு வலயம் காணிகள் சுவீகரிக்க ஆலோசனை



(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயம் யாழில் சில பகுதிகளில் தொடர்ந்தும் பேணப்பட வேண்டியுள்ளதால் தனியார் காணிகள் சில அரசிடம் சுவீகரம் செய்யப்படவுள்ளது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் வசிக்கும் மக்களின் காணிகளை சுவீகரிப்பு செய்யவுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சில இடங்களில் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்தும் தேவைப்படுவதாலேயே அரசாங்கம் சட்டரீதியாக நிலங்களை சுவீகரம் செய்யவுள்ளதாகவும், இதனால் பாதிக்கப்படும் மக்கள் வேறு இடங்களில் குடியேற்றப்படுவர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அதற்கு முன்னர் எந்தெந்தப் பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயத்துக்குத் தேவைப்படும் என்று பாதுகாப்பு மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.


பெரும்பாலான உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகள் யாழ்.மாவட்டத்திலேயே இருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா.மீது அள்ளிவீசும் குற்றச்சாட்டுகள் கோத்தாபய குறித்து விக்கிலீக்ஸ் தகவல்

## றொபேட் ஓ பிளேக்குடன் சூடான விவாதம்

(கொழும்பு)

**போர் முடிவுக்கு வந்தவுடன் ஐ.நாவையும், அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவையும் நாட்டை விட்டு வெளியேற்றுவதிலேயே பாதுகாப்புச்செயலர் கோத்தாபய ராஜபக்ஷ குறியாக இருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.**



கொழும்புக்கான அமெரிக்கத் தூதராக பணியாற்றிய றொபேட ஓ பிளேக் இலங்கையில் தனது பணிகளை முடித்து வெளியேறும் போது, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவை கடைசியாகச் சந்தித்த போதே அவர் ஐ.நா மற்றும் அனைத்துலக செஞ்சிலுவைக் குழு ஆகியவற்றின் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.


விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்த அடுத்த நாள் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

போர் வலயத்தில் கொல்லப்பட்டவர்களை அடையாளம் காணும் விடயத்தில் ஐ.நா மற்றும் அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவை தொடர்புபட அனுமதிக்க முடியாது என்றும், அவர்களின் எதிர்மறையான அணுகுமுறையே அதற்குக் காரணம் என்று கோத்தாபய ராஜபக்ஷ அப்போது கூறியுள்ளார்.

அவர்களின் அறிக்கைகள் உணர்வுகளைக் கிளறி விடுவதுடன், பிளவுகளை அதிகமாக்கி, நல்லிணக்கத்துக்கான வாய்ப்புகளை கெடுத்து விடும் என்றும் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதனை வன்மையாக நிராகரித்த பிளேக், மனிதாபிமான நெருக்கடிகளின் போது அனைத்துலக செஞ்சிலுவைக் குழு இலங்கை அரசுக்கு மகத்தான உதவிகளை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இருந்தபோதும் கோத்தாபய ராஜபக்ஷ அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவோ ஐ.நாவோ இலங்கை அரசுக்கு உதவி வழங்கவில்லை என்ற தொனியில் பதிலளித்துள்ளார்.



அரசதரப்பில் சில குறைபாடுகள் இருப்பதை ஒப்புக்கொண்ட கோத்தாபய ராஜபக்ஷ, அனைத்துலக அமைப்புகளில் ஆசியர்களை அதிகம் சேர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அவர்களால் தான் அரசாங்கத்தையும், இராணுவத்தையும் அதிகம் புரிந்து கொள்ள முடியும் என்றும் கோத்தாபய ராஜபக்ஷ குறிப்பிட்டதாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

## சனல் - 4 இற்கு எதிர் பிரசாரம் அரசுக்கு பூரண வெற்றி

(கொழும்பு)

சனல் 4 காணொளிக்கு எதிராக பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட விளக்க காணொளி காட்சிகள் குறித்து மேற்குலக நாடுகள் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதி விடப் பிரதிநிதி கலாநிதி பாலித ஹொகன தெரிவித்துள்ளார்.

இந்த விளக்க காணொளியை காண்பிக்குமாறு மேற்குலக நாடொன்றின் தூதரகத்திடம் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சனல் 4 காணொளித் தொகுப்புக்கு எதிராக பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட விளக்கக் காணொளி கடந்த ஆறாம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கக் காணொளிக்கு இதன்போது உயர்ந்தளவிலான வரவேற்பு காணப்பட்டதாக கலாநிதி பாலித ஹொகன மேலும் கூறினார்.

# பல்வேறு சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க வலுவான சமூகக் கட்டமைப்பு வேண்டும்

## சுட்டிக்காட்டுகிறது கிரௌவ்ண்ட் வியூ

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பல்வேறு சமூகப் பிரச்சினைகளை களைய வலுவான நிர்வாகமும் பொதுமக்கள் கட்டமைப்பும் தேவையென கிரௌவ்ண்ட் வியூ இணையத்தளம் தெரிவித்துள்ளது.

போருக்குப் பின்னர் இலங்கையில் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக வடக்கு கிழக்கில் பெண்கள் மீது வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராணுவ மயப்படுத்தப்பட்ட சூழ்நிலையிலேயே இந்த வன்முறைகள் இடம்பெறுகின்றன.

அண்மைக் காலமாக கிறீஸ் பூதங்கள் என்ற ஒரு செயற்பாடு குறிப்பாக வடக்குகிழக்கு ஹட்டன் போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு,அம்பாறை,புத்தளம் போன்ற இடங்களில் இந்த கிறிஸ் பூதப் பிரச்சினை தீவிரமாகியிருக்கிறது. இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலேயே இந்தச் சம்பவங்கள் பெரும்பாலும் இடம்பெறுகின்றன.

இரவில் நடமாடும் கிறிஸ் பூதங்கள் என்ற மர்மமனிதர்கள் மக்களைக் காயப்படுத்தும் வகையில் தாக்குதல் நடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். போருக்குப் பின்னர் இராணுவப் பாதுகாப்பின் மத்தியில் இடம்பெறும் இவ்வாறான சம்பவங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று கிரௌண்ட் வியூ குறிப்பிட்டுள்ளது. சிறுபான்மையினர் மீது நடத்தப்படும் இந்த வன்முறைகள் காரணமாக இலங்கையின் மதிப்புக்கே தொடர்ந்தும் களங்கம் ஏற்பட்டு வருகிறது. எனவே இலங்கைக்கு வலுவான நீதியான தலைமைத்துவமும் இந்தியாவின் அன்னா ஹசாரே போன்ற பொதுமக்கள் தலைமைத்துவமும் தேவை என்று கிரௌண்ட் வியூ வலியுறுத்தியுள்ளது.

# அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு இலங்கையின் நிலைமை குறித்து விளக்கம்

(கொழும்பு)

போருக்குப் பிந்திய அபிவிருத்தி மற்றும் இலங்கை பற்றிய அமெரிக்காவின் கொள்கை அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுடன் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய கலந் துரையாடல் ஒன்றை இந்தவாரம் மேற்கொண்டார்.

தூதுவர் இல்லத்தில் காங்கிரஸின் பிரதம அலுவலர் மற்றும் மூத்த உறுப்பினர்களுக்கு வழங்கிய விருந்துபசாரத்திலேயே மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கை பற்றிய உண்மை நிலவரத்தை தெளிவுபடுத்துவதே இச்சந்திப்பின் முக்கிய நோக்கம் எனத்தெரிவித்தார் தூதுவர். இச்சந்திப்பில் வட கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றம்,கண்ணிவெடி அகற்றல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி விடயங்களும் கலந்துரையாடப்பட்டது. மேலும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட 2009 இற்குப்பின் இலங்கை அரசின் நடவடிக்கை சம்பந்தமான வீடியோவும் காட்சிப்படுத்தப்பட்டது. மேலும் இதன் பிரதிகள் கலந்துகொண்ட பிரதிநிதிகள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

தூதுவருக்கு நன்றி தெரிவித்த காங்கிரஸ் உறுப்பினர்கள் தாம் பெற்றுக் கொண்ட தகவல்களை ஏனைய உறுப்பினர்களுடனும் பகிர்ந்து கொள்வதாகத் தெரிவித்தனர்.


# மீள்குடியேற்ற அமைச்சுக்கு அடுத்த ஆண்டில் மூடுவிழா

(கொழும்பு)

அடுத்த ஆண்டு தொடக்கம் மீள்குடியேற்ற அமைச்சைக் கலைத்து விட அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பெரும்பாலும் பூர்த்தியடைந்து விட்ட நிலையில் இந்த அமைச்சு தேவையற்றது என்று கருதப்படுவதாலேயே, அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் அந்த ஊடகம் தகவல் வெளியிடுள்ளது.

2009இல் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டபின்னர், சுமார் 300,000 பேர் இடம்பெயர்ந்திருந்த நிலையில் மீள்குடியேற்ற அமைச்சு உருவாக்கப்பட்டிருந்தது.



ஆனால் தற்போது 8000 பேர் மட்டுமே மீளக்குடியேற்றப்படாதுள்ளனர். இவர்களும் அடுத்த சில மாதங்களில் மீளக் குடியேற்றப்பட்டு விடுவர் என்றும் அரசாங்கம் நம்புகிறது.

அதேவேளை சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்து மூன்று முகாம்களில் வசித்து வரும் 900 குடும்பங்களை இடம்பெயர்ந்தோராக கருதமுடியாதுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுனர் றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம கூறியுள்ளார்.

இந்தநிலையிலேயே மீள்குடியேற்ற அமைச்சைக் கலைத்து விட்டு, அது சார்ந்த எஞ்சியுள்ள பணிகளை மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்க திட்டமிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

35. எமது நாட்டு வரவு செலவுத்திட்டத்தில் இவ்வருடம்............................தொகை ஐம்பது மில்லியன் ஆகும்.
1. குறைநிரப்பு
2. துண்டு விழும்
3. பற்றாக்குறை
4. மேலதிக

36. ஆயுத மோசடியில் நடைபெற்ற ஊழல்களை விசாரிக்க ஜனாதிபதி.....................நியமித்தார்.
1. நீதிபதி
2. ஆய்வுக்குழு
3. செயற்குழு
4. ஆணைக்குழு

**பின்வரும் கவிதையை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.**

கானெலாம் மலர்ந்த முல்லை
ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை
நிரை நிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த
வெள்ளி வெண்கும்ப மென்னத்
தூநிலா மதியம் வந்து
குணதிசைத் தோன்றிற்றம்மா

37. இக்கவிதையில் கவிஞர் வர்ணிக்கும் காட்சி யாது?
1. சூரியோதயம்
2. சூரிய அஸ்தமனம்
3. சந்திரோதயக் காட்சி
4. வேனில் விழாக் காட்சி

38. தாரை எதைப்போல எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்.
1. நிரை
2. முல்லை
3. நிலா
4. வான்

39. குணதிசை என்பது,
1. வடக்கு
2. கிழக்கு
3. தெற்கு
4. மேற்கு

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி இருக்கின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) தினசரிப்பத்திரிகைகளில் கூட ஒரு பகுதி கவிதை விமர்சனத்திற்கென்றே ஒதுக்கப்படுகிறது.

ஆ) விமர்சம் இதோ பெருகிவிடும் பயம் வேண்டாம்.

இ) கவிதைகள் புத்தக வடிவத்திலும் பத்திரிகைகளிலும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. கவிதை விமர்சனங்களும் நடக்கின்றன.

ஈ) பாவம் அவர் இனிக் கண்ணீர் வடிக்க வேண்டாம்

உ) மேலைத் தேசத்தில் ஒருவர் ஒன்று செய்தால் அதற்கு நூறு விமர்சனம் வந்துவிடும் என்றும் இங்கே அவ்வளவு தூரம் அந்தத் துறை விரியவில்லை என்றும் ஒரு விமர்சகர் அளுகின்றார்.

1) இ, ஆ, அ, ஈ, உ
2) உ, இ, ஈ, அ, ஆ
3) இ, உ, ஈ, அ, ஆ
4) அ, இ, ஆ, உ, ஈ







திரு. T.S.குகன் (ஆசிரியர்)

# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் -1 மணி

# கல்வி முரசு

## தமிழ்மொழியும் இலக்கியமும் - பகுதி I

யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1,2,3,4 என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான விடையைத் தெரிவு செய்க.**

**தெரிவு செய்க.**

01. தோயும் திரைகள் அலைப்ப.............இங்கு திரைகள் என்பதன் கருத்து,
1. திரை
2. அலைகள்
3. மறைதல்
4. மாற்றம்

02. சிவப்பிரகாசம் ஒரு கணம் திக்குமுக்காடினார். இதில் திக்குமுக்காடினா என்பதன் பொருள்.
1. தடுமாறினார்
2. கஷ்டப்பட்டார்
3. வருந்தினார்
4. களைப்படைந்தார்

03. "ஐயனே நாம் இருவரும் கானகம் சென்றது".......... இதில் ஐயன என்பதன் எதிர்ப்பாற் சொல்,
1. ஐயந்தி
2. ஐயி
3. ஐயை
4. ஐயா

04. துறவி இச்சை கொள்ளல் கூடாது. இச்சை என்பதன் எதிர்ப்பதம்,
1. பிச்சை
2. நிச்சை
3. தீட்சை
4. அநிச்சை

05. இறைவனை வழிபட்டு நற்பேறுபெற்றேன். இதில் நற்பேறு என்பதன் எதிர்ப்பதம்,
1. தீப்பேறு
2. துர்ப்பேறு
3. அவப்பேறு
4. முத்தி

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. "டிஜிற்றல்" என்ற சரியான தமிழ் வடிவம்.
1. எண்மானம்
2. வையக விரிவு வலை
3. வலைத்தளம்
4. வன்பொருள்

07. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன குறிப்பது,
1. நானிலம்
2. நால்வேதம்
3. நாற்படை
4. நாற்பயன்

08. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை,
1. நாற்குணம்
2. நாற்பொருள்
3. நால்வகை அறம்
4. நால்வகைப் பருவம்

09. உப்பின்றிச் சமைத்த சாதம் வேள்வியில் தேவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் உணவு,
1. சோறு
2. படையல்
3. அவிசு
4. தவிசு

10. 25 ஆவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா,
1. பவள விழா 2. வைரவிழா
3. அமுத விழா 4. வெள்ளி விழா

11. பென்சில், சினிமா, சிமெந்து என்பவை எவ்வகை மொழிச் சொற்கள்
1. ஒல்லாந்து 2. போர்த்துக்கீசம்
3. மாராட்டி 4. ஆங்கிலம்

12. அணில், கிளி, கமுகு - இந்த மூன்றினதும் இளமைப் பெயர்கள்,
1. குட்டி, பேத்தை 2. கன்று, குஞ்சு
3. குஞ்சு, பிள்ளை 4. கன்று, பறள்

13. சிங்கத்தின் இளமை மரபுப் பெயர் குறிப்பது.
1. போதகம் 2. குட்டி
3. குருளை 4. கன்று

14. ஆந்தை அலறும் என்பது போல மயில்
1. அகவும் 2. பிளிறும்
3. கூவும் 4. ஆடும்

15. கிழக்குத் திசையில் இருந்து வீசும் காற்று எவ்வாறு அழைக்கப்படும்?
1. வாடை 2. சோளம்
3. கச்சான் 4. கொண்டல்

**✍ பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. "சாக்குப்போக்கு ஒன்றைச் சொல்லுவது" என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்,
1. இடித்துரைத்தல் 2. பசையடித்தல்
3. தட்டிக்கழித்தல் 4. ஆறப்போடுதல்

17. அளவுக் கணக்கின்றி கண்மூடித்தனமாகச் செலவு செய்யும் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்,
1. வீண்விரயம் 2. பயன்பாடானது
3. ஒளிகொடுப்பது 4. பயனற்றது

18. வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும் என்னும் கருத்தினை விளக்கும் பொருத்தமான பழமொழி,
1. கந்தையானாலும் கசக்கிக்கட்டு 2. சாண்ஏற முழம் சறுக்கும்
3. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு 4. குப்பையிலே கிடந்தாலும் குன்றிமணி மங்காது

19. "தருமம் செய்து கெட்டவர் இல்லை" என்னும் பொருள் தரும் பழமொழி,
1. இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை 2. துள்ளுகிற மாடு பொதி சுமக்காது
3. ஆழமறியாடல் காலைவிடாதே 4. இளமையில் கல்வி சிலையில் எழுத்து

20. முதலைக் கண்ணீர் வடித்தல் என்னும் இலக்கணத் தொடரின் பொருள்,
1. பொய்யிரக்கம் 2. பெருமகிழ்ச்சி
3. மெய்யிரக்கம் 4. தேம்பி அழுதல்

**✍ பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. வெற்றிலை என்பதைப் பிரித்து எழுதினால்,
1. வெற்று + இலை 2. வெற்றி + யிலை
3. வெறுமை + இலை 4. வெற்பு + இலை



22. வீரன் சுடுசரம் இதில் சுடுசரம் என்பது,
1. வினைத்தொகை 2. பண்புத் தொகை
3. அன்மொழித் தொகை 4. உவமைத் தொகை

23. குதிரை காற்றிலும் வேகமாகப் பறந்து சென்றது. இது எவ்வகை அணி?
1. உவமையணி 2. உருவக அணி
3. உயர்வு நவிற்சி அணி 4. தற்குறிப்பேற்ற அணி

24. பின்வருவனவற்றுள் உம்மைத் தொகை எது?
1. பவளவாய் 2. முத்துப்பல்
3. விடுகணை 4. சேர சோழ பாண்டியன்

25. நேற்றுக்காலை மருத்துவர் "துஞ்சினார்" என்ற செய்தி எங்கும் பரவிற்று. "துஞ்சினார் என்பது,
1. இடக்கரடக்கல் 2. மங்கலம்
3. குழுஉக்குறி 4. மரூஉ

26. பின்வருவனவற்றுள் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வழங்கும் ஒரு சொல்,
1. பிணை 2. கன்னி
3. விதவை 4. விவேகி

27. உலகம் சிரித்தது. இதில் உலகம் என்பது,
1. சினையாகும் பெயர் 2. இடவாகு பெயர்
3. தொழிலாகு பெயர் 4. குணவாகு பெயர்

28. கோப்பாய்க்கு வடக்கே நீர்வேலி உள்ளது. இது எத்தனையாம் வேற்றுமை?
1. இரண்டாம் வேற்றுமை 2. ஐந்தாம் வேற்றுமை
3. நான்காம் வேற்றுமை 4. ஏழாம் வேற்றுமை

29. பூஞ்செடி என்பதில் எவ்வகைப் புணர்ச்சி இடம்பெற்றுள்ளது?
1. இயல்பு 2. தோன்றல்
3. கெடுதல் 4. திரிதல்

30. கார்த்திகை பூத்தது என்பதில் கார்த்திகை என்பது எவ்வகைப் பெயர்?
1. இடப்பெயர் 2. சினைப் பெயர்
3. பொருட் பெயர் 4. காலப் பெயர்

31. பின்வருவனவற்றுள் காரணப் பெயர் எது?
1. மயில் 2. பொன்
3. மரம் 4. நாற்காலி


32. அணை திறந்ததும் வெள்ளம் புகு புகு எனப் பாய்ந்தது - இதில் புகு புகு என்பது?
1. அடுக்குத் தொடர் 2. இரட்டைக் கிளவி
3. அடுக்கிடுக்குத் தொடர் 4. இணை மொழி

**✍ பின்வருவனவற்றில் வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.**

33. தமிழ்மொழித்தின.............................பாடசாலைக்குக் கடந்த மாதம் அனுப்பப்பட்டது.
1. அறிக்கை 2. சுற்றறிக்கை
3. சுற்று நிருபம் 4. கட்டளை

34. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் குணங்களைச் சேர்ந்த பண்பு...................எனப்படும்.
1. சால்பு 2. பெருமை
3. உயர்வு 4. மேன்மை

# இணைபிரியாத அன்பு



பிறந்து 11 மாதத்தில் ஆனாதையாக வீதியில் தனித்து நின்றபோது அந்த உறவு ஆரம்பமானது. அன்றிலிருந்து இன்று வரை இணை பிரியாத நண்பர்களாக வீதியில் நடந்துசெல்வது, புத்தகம் படிப்பது, பப் (PoP) போன்ற எல்லா சுவாரசியமான விடயங்களிலும் இருவரும் இணைந்து தான் இருக்கின்றனர். ஆனால் என்ன வயது வித்தியாசம் இருக்கதான் செய்கின்றது. அந்த 65 வயது நபருக்கு குறைந்த வயதில் அந்த நட்பு வேண்டுமா? .. என்ன ஏதோ கதை என்று நினைக்கின்றீர்களா? இது கதை மாதிரி ஆனால் உண்மை. ஒரு வாத்தும் மனிதனும் மிகவும் நெருங்கிய நண்பர்களாக இருக்கின்றனர்.

# 120 வித ஒலியெழுப்பும் ஆபிரிக்க கிளி

ஆபிரிக்க சாம்பல் நிறக் கிளி, 120 விதமாக ஒலியெழுப்புகிறது. மக்கள் வீடுகளில் வளர்க்கும் பறவை கிளி ஆகும். குழந்தைகளை அதிகம் கவரும் பறவை கிளி என்பதால், அவற்றை வாங்கி, கூண்டுகளில் வளர்க்கின்றனர். சாதாரண கிளிகள், பஞ்சவர்ண கிளிகள், வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்படும் வெள்ளை, நீல வண்ண சிறிய கிளிகள் ஆகியவற்றை விற்பனை செய்வதை, பலர் தொழிலாகக் கொண்டுள்ளனர்.



பொதுவாகவே கிளிகள் பேசும் திறன் கொண்டவை. அதிலும், ஆப்ரிக்க காடுகளில் வாழும் சாம்பல் வண்ணக் கிளிகள், மனிதர்கள் பேசும்போது, ஒலியை துல்லியமாகக் கவனித்து, மீண்டும் உச்சரிக்கக் கூடியவை. 120 வகையான ஒலிகளை எழுப்பக் கூடியவை. நினைவாற்றல் திறன் அதிகம் கொண்டவை. இவற்றின் ஆயுள் காலம் 80 முதல் 95 ஆண்டு. வீடுகளில் அழகுக்காகவும், பெரிய அளவிலான வர்த்தக நிறுவனங்கள், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் அதிஷ்டத்திற்காகவும் இவற்றை வீடு களில் வளர்க்கின்றனர்.

# சாப்பாட்டு "ராமி"



சில வேளைகளில் நாங்கள் பலவீனம் என்று நினைக்கிற விடயம் எங்களுக்கு பரிசுகளை வென்று தந்துவிடுகின்றது. சொன்யா தோமஸ் குறைந்த நேரத்தில் கூடியளவு சாப்பிடக்கூடிய நல்ல பெண். இதையே நம்ம ஊரில யாராவது செய்தால் நாங்கள் அதை சாப்பாடு ராமி என்று சொல்லி கிண்டில் அடிப்போம் ஆனால் வெர்ஜீனியா நாட்டில் நடைபெற்ற உணவு உண்ணும் போட்டியில் பங்குபற்றி 1500 அமெரிக்க டொலர்கள் (அண்ணளவாக 16 500 ரூபா) பரிசாகப் வென்றுள்ளார். இவர் 12 நிமிடங்களில் சுமார் 183 கோழிக்கால்களை சாப்பிட்டு முதலிடத்தை தட்டிச்சென்றுள்ளார். இப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற ஆணொருவரால் 174 கோழிக்கால்களையே சாப்பிடமுடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# தூப்பினால் தப்பமுடியாது



பொதுவாக நல்ல பாம்புகள், மனிதனால் தமக்கு ஆபத்து ஏற்படப் போவதாகக் கருதினால் மனிதனை எதிர்துச் சண்டையிடும்போது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வாயுக்குளிருந்து ஒரு வகை விஷத்தை எதிரியின் கண்களை நோக்கி பீச்சுகின்றன.இவ் விஷம் கண்ணில் பட்ட உடனே கண் குருடாகிவிடும்.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாம்பு தப்பிவிடும்.இரையை ஏணைய பாம்புகளைப்போல் கடித்து உணவாக்கிக் கொண்டாலும், சில வேளை இரை சவாலாக விளங்கும் போது இவ்வாறு விஷத்தைப் பீச்சிக் கொல்கின்றன. இப்பாம்புகள் உணவாக தவளைகள், சிறு முலையூட்டிகள் மற்றும் பறவைகளை உட்கொள்கின்றன. இந்த விஷம் உமிழும் கறுப்பு நாகப் பாம்பினால் 2 மீட்டர் தூரத்திற்க்கு விஷத்தை பீச்ச முடியும். இப் பாம்புகள் 1.5 மீட்டர் நீளம் வரை வளரும். யூன்,யூலை மாதங்களில் இணை சேரும் இப்பாம்புகள், 6 தொடக்கம் 20 முட்டைகளை இட்டு 88 நாட்கள் அடைகாத்து குஞ்சு பொரிக்கும்.

# ஒரே கிளிக்கில் Open செய்ய

நாம் கணினியில் கட்டண மென்பொருட்கள், இலவச மென்பொருட்கள் என பல்வேறு வகையான மென் பொருட்களை உபயோகிக்கிறோம். இந்த மென்பொருட் களை நாம் தினமும் ஓப்பன் செய்ய டெஸ்க்டாப்பில் உள்ள அந்த மென்பொருளின் ஷார்ட் கட் ஐகான் மூலம் திறப்போம் அல்லது Start – Windows – Programs – சென்று திறப்போம். இப்படி கணினியில் மென் பொருளை திறக்க பல வழிகள் உண்டு. அதில் ஒன்று தான் நாம் இப்பொழுது பார்க்க போகும் Short Cut Key உருவாக்கி அதன் மூலம் திறப்பது. உலகில் பெரும்பாலான கணினிகளில் உபயோகிக்கப்படும் விண்டோஸ் இயங்கு தளத்தில் இதற்க்காக ஒரு வசதியை அளித்துள்ளனர். இதற்காக நீங்கள் எந்த மென்பொருளும் கணினியில் இணைக்க வேண்டி யதில்லை. தினமும் உபயோகப்படுத்தும் மென்பொருட் களுக்கு செட் செய்து விட்டால் மவுஸ் பயன்படுத்தா மல் Short Cut key கொடு ்தாலே ஓப்பன் ஆகிவிடும். இந்த வசதியை உருவாக்க பெரிய தொழில்நுட்ப அறிவு எதுவும் பெற்றிருக்க தேவையில்லை சுலபமாக செய்து விடலாம்.

நீங்கள் shortcut Key உருவாக்க நினைக்கும் மென்பொருள் மீது வலது கிளிக் செய்து Propert ies கிளிக் செய்யுங்கள். உங்களுக்கு இன்னொரு விண்டோ ஓப்பன் ஆகும் அதில் Shortcut tab தேர்வு செய்து கொள்ளுங்கள். அந்த டேபில் Shortcut Key என்ற பகுதியில் None என்று இருக்கும் அதில் கிளிக் செய்து ஏதாவது ஒரு லெட்டரை அழுத்துங்கள். உதாரணமாக 1 அழுத்தினால் உங்களுடைய shortcut key Ctrl+Alt+1 என வரும். A அழுத்தினால் Ctrl+Alt+A என வரும் இப்படி உங்களுக்கு தேவையான கீயை செட் செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு தேவையான கீயை தேர்வு செய்தவுடன் கீழே உள்ள Apply- Ok கொடுத்து விடுங்கள். அவ்வளவு தான் இப்பொழுது நீங்கள் உருவாக்கிய shortcut key அழுத்துங் கள். அந்த மென்பொருள் உடனே ஓப்பன் ஆகிவிடும். இப்படி பல மென்பொருட் களுக்கு நீங்கள் கீயை உருவாக்கி கொள்ளலாம்.

கணினி மூலை

# மெழுகை உருக்கி தத்துரூபமாக சிலை செய்யும் அமெரிக்க பெண்

அமெரிக்காவின் மன்ஹாட்டன் நகரைச் சேர்ந்த பெண் கரோல் பியூவர்மேன்(66). ஆயில் பெயின்டிங் வரைவதில் கில்லாடி. பல ஆண்டுகளாக தத்துரூப மெழுகுச் சிலைகளையும் உருவாக்கி வருகிறார்.

சிலை உருவாக்குவதில் தன் அனுபவம் பற்றி சொல்கிறார் கரோல். ஒரு படம் வரைவதோ, சிற்பம் செதுக்குவதோ முடியாத காரியம் அல்ல. பயிற்சிகள் இருந்தால் போதும். ஆனால் அதில் உயிரோட்டம் கொண்டு வருவதுதான் சிரமம். என் ஒவ்வொரு படைப்பும் உயிரோட்டத்துடன் இருக்க வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைக்கிறேன். ஒரு மெழுகுச் சிலை உருவாக்கி முடிக்க 6 மாதம் செலவிடுகிறேன்.



சிலருக்கு முகம் அழகாக இருக்கும். வேறு சிலருக்கு கை, கால்கள், இடுப்பு அழகாக இருக்கும். அதனால் ஒருவரை மட்டுமே மொடலாகக் கொண்டு முழுச் சிலையையும் நான் வடிப்பதில்லை. முகத்துக்கு ஒருவர், கழுத்து, இடுப்புக்கு ஒருவர் என ஐந்தாறு பேரை தனித்தனியாக மொடல்களாகக் கொண்டே பெரும்பாலும் என் சிற்பம் இருக்கும். மெழுகு, திரவ பாலியஸ்டர் பயன்படுத்தி சிலைகளை உருவாக்குகிறேன்.

மோல்டு மூலம் முதலில் சிலைக்கு உருவம் கொடுக்கிறேன். பிறகு உப்புத்தாள் மூலம் தேய்த்து தேய்த்து பாலிஷ் செய்கிறேன். சிலை தத்துரூபமாக அமைவதற்கு இந்த பாலிஷ் கட்டம் ரொம்ப முக்கியம். பின்னர் தோல் நிறத்திலான ஓயில் பெயின்ட்டை பல முறை அடித்து காயவிடுகிறேன். நீச்சலின் போதோ, யோகாசனம் செய்யும் போதோ நம் முகத்தில் இருக்கும் உணர்வு, சிலையில் கொஞ்சம்கூட குறைந்துவிடக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை செலுத்துகிறேன். என் படைப்புகளை பார்க்கும்போது நிஜ மனிதர்களைப் பார்ப்பதாகவே உணர்கிறேன்.


இவர் உருவாக்கும் தத்துரூப மெழுகுச் சிலைகள் பெரும் வரவேற்பைப் பெற்றுவருகின்றன. 6 மாதம் செலவு செய்து அவர் தயாரிக்கும் சிலை ரூ.1.85 கோடி வரை விற்கப்படுகிறது.

# விடுதலைப்புலிகளிடமிருந்து "வைகோ" பணம் பெற்றார்

**விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவல்**

திராவிட முன்னேற்றக்கழகத்தில் இருந்து வை. கோபாலசாமி 1993ம் ஆண்டு விலகியதன் பின்னர் அவர் தலைமையில் மறுமலர்ச்சித் திடாவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்தெடுக்க தமிழீழ விடுதலைப்புலிகள் வை. கோவிற்கு நிதி உதவி அழித்ததாக சர்ச்சைக்குரிய இணையத்தளத்தை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2006 ஆண்டு மே 15ஆம் திகதி தமிழக ஆட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றியதன் பின்னர் இரண்டு நாட்கள் கழித்து விக்கிலீக்ஸ் இணையத்திற்கு இத்தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. ஐக்கிய அமெரிக்காவுக்கான அப்போதைய இந்திய பதில் கொன்சூலர் ஜெனரல் ரவி கந்தாய் இத்தகவலை வெளியிட்டுள்ளார். எனினும் புலிகள் வைகோவுக்கு நிதியுதவி வழங்கியதை உறுதிப்படுத்த ஆதாரங்கள் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இருந்த போதும் தமிழர்கள் நன்கு அறிந்த தமிழ்நாட்டில் வசித்த இலங்கைத் தமிழரான ஈழ அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் நிறுவுனர் சந்திரஹாசன் மூலம் தான் இத்தகவலை தெரிந்து கொண்டதாக ஜெனரல் ரவிகந்தாய் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கனடா, பிரித்தானியா, நெதர்லாந்து மற்றும் ஜேர்மனீ உள்ளிட்ட நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் அந்த நாடுகளில் செயற்பட்ட தமிழர் கலாசார அபிவிருத்தி நிலையம், சமய மத்திய நிலையங்கள் ஊடாக தங்களது மாதாந்தச் சம்பளத்தில் 10 வீதத்தை உதவியாக அளித்துள்ளனர். இந்தச் செயலானது கிட்டத்தட்ட கப்பம் வழங்குவதற்கு நிகர் என ரவி கந்ததாய் விமர்ச்சித்துள்ளதாக விக்கிலீக்ஸ் இணையத்தளத்தை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# கொலை வெறிப் பேச்சு பழ. நெடுமாறன் கண்டனம்

**கற்றுக்குட்டி காங்கிரஸ்காரர் என்று வர்ணிப்பு**

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட மூன்று பேரையும் சிறையில் புகுந்து கொன்றிருக்க வேண்டும் என்று பேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பழ.நெடுமாறன் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மூன்று தமிழர்களின் உயிர்காப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் இது தொடர்பாக நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ராஜீவ் கொலையாளிகள் மூவரையும் சிறைக்குள் சென்று கொன்றிருக்க வேண்டும். அப்படிச் செய்யாததால்தான் இன்று விடுதலை செய்ய வேண்டும் என்கிற அளவுக்கு பேச ஆரம்பித்து விட்டார்கள் என தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் இளங்கோவன் பகிரங்கமாகப் பேசியிருக்கிறார்.

அவரின் இந்தக் கொலை வெறிப்பேச்சை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, அவர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கும்படி தமிழக அரசை வலியுறுத்துகிறேன்" என்று கூறியுள்ளார்.

தமிழக மக்களின் மன உணர்வுகளை மதித்து தமிழக சட்டமன்றத்தில் மூவரின் தூக்குத் தண்டனையைக் குறைக்க வேண்டுமென முதல்வர் ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றச் செய்ததையும், அனைத்துக் கட்சிகளும் இணைந்து அதற்கு ஆதரவு அளித்ததையும் மதியாமல் மிரட்டும் போக்கில் இளங்கோவன் பேசியிருப்பது அவர் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியை ஆழமாகக் குழிதோண்டிப் புதைத்துவிடும் என எச்சரிக்கிறேன்" என்று கூறியுள்ளார் நெடுமாறன்,

மகாத்மா காந்தி கொலை வழக்கில் கோட்சே, ஆப்தே ஆகிய இருவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது அவர்களின் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என காந்தியடிகளின் புதல்வர்களான தேவதாஸ் காந்தி, இராமதாஸ் காந்தி ஆகியோர் உட்பட காந்தியடிகளுக்கு நெருக்கமாக இருந்த சிலர் கையெழுத்திட்டு கருணை மனு ஒன்றை அன்றைய பிரதமர் நேருவுக்கு அனுப்பி வைத்தார்கள் என்பதை இளங்கோவன் போன்ற கற்றுக்குட்டி காங்கிரஸ்காரர்கள் தெரிந்திருக்க நியாயமில்லை" என்று சாடியுள்ளார்.

## இந்தியச் செய்திகள்

### மீண்டும் களமிறங்கும் நயன்தாரா

நானும் நயன்தாராவும் பெற்றோர்கள் ஆசியுடன் திருமணம் செய்து கொள்ளப்போகிறோம் எனவும் திருமண திகதியை சரியான நேரத்தில் அறிவிப்போம் என பிரபுதேவா முதல் முதல் அறிவித்துள்ளார்.

எனவே பிரபுதேவாவின் அனுமதியுடன் மீண்டும் நடிக்க வருகிறாராம் நயன். கதாநாயகர்கள் தொட்டு நடிப்பது, காதல் காட்சிகள், டூயட் போன்ற விடயங்கள் இல்லாத கதையம்சம் உள்ள படங்களில் நடிக்க அவர் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

# தமிழக மீனவர்களைப் பாதுகாக்க கைத்துப்பாக்கி வழங்க வேண்டும்

(சென்னை)

இலங்கை மீனவர்களின் தாக்குதலில் இருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதற்கு அவர்களுக்கு கைத்துப்பாக்கிகளை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழக சட்டசபையில் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழக சட்டசபையில் கடந்த வாரம் இடம் பெற்ற விவாதம் ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. இராமச்சந்திரன் மேற்படி கோரிக்கையை முன்வைத்தார். தமிழக மீனவர்களின் கடற்தொழில் உபகரணங்களை இலங்கை மீனவர்கள் தாக்கிச்சேதப்படுத்துவதாகவும் எனவே தமிழக மீனவர்களையும் அவர்களது உடமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# தமிழ் சினிமா வளர்ச்சியடையவில்லை

**- பஞ்சு அருணாசலம் -**

தமிழ் சினிமா வளர்ச்சியடைந்துள்ளதாக சில சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் இது போலித்தனமானது.சினிமாவுக்கு நல்லதல்ல, என்றார் தமிழ் சினிமா ஜாம்பவான்களில் ஒருவரான பஞ்சு அருணாசலம் தெரிவித்துள்ளார். சூப்பர் டீம் சினிமாஸ் தயாரிக்கும் "நந்தா நந்திதா" படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசுகையில், "முன்பெல்லாம் வருடத்துக்கு 60 படங்கள்தான் திரைக்கு வரும். அதில், 30 படங்கள் நட்டம் அடையாது. 20 படங்கள் நூறு நாட்கள் ஓடும். 5 படங்கள் வெள்ளிவிழா காணும். 5 படங்கள் மட்டும் நஷ்டம் அடையும் ஒரு படம் தயாரிக்க முப்பதாயிரத்தில் இருந்து நாற்பதாயிரம் அல்லது சில லட்ச ரூபாய்தான் ஆகும். முப்பது அல்லது நாற்பது நாட்களில் படம் தயாராகி விடும். ஆனால் இப்போது, வருடத்துக்கு 160 படங்கள் திரைக்கு வருகின்றன. அதில், மூன்று அல்லது நான்கு படங்கள்தான் ஓடுகின்றன. ஒரு படம் தயாரிக்க 80-ல் இருந்து 200 நாட்கள் வரை ஆகிறது. முன்பு திறமைக்கு மதிப்பு இருந்தது. இப்போது பணத்துக்குத்தான் மதிப்பு இருக்கிறது. பணத்தை வைத்துதான் வெற்றி நிர்ணயம் செய்யப்படுகிறது. போலித்தனமான வெற்றிகள் அதிகமாகி விட்டன. இந்த போலித்தனமான வெற்றியும் வளர்ச்சியும் சினிமாவுக்கு உதவுமா?

# உளவுத்துறையின் பலவீனமே டில்லி குண்டு வெடிப்புக்கு காரணம்

**பிரதமர் மன்மோகன்சிங் சீற்றம்**

(புதுடில்லி)

உளவுத்துறையின் பலவீனம் காரணமாக டில்லி குண்டு வெடிப்பைத் தடுத்து நிறுத்த முடியாமல் போய்விட்டதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

15ஆவது தேசிய ஒருமைப்பாடு கவுன்சில் கூட்டம் இன்று காலை டெல்லியில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் மத்திய மந்திரிகள், மாநில முதல்வர்கள், எம்.பி.க்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் பேசுகையில் கூறியதாவது: தீவிரவாதமும், இடது சாரி நக்சல் தீவிரவாதமும் நமது நாட்டுக்கு இரு பெரும் சவால்களாக உள்ளன. தவறான போதனைகள் மூலம் தீவிரவாதிகள் இத்தகைய நாச வேலையை நியப்படுத் துகின்றனர்.

நாகரீகமுள்ள எந்த ஒரு சமுதாயமும் இத்தகைய இழப்பையும், அன்புக் குரியவர்கள் உயிர் பறி போவதையும் ஏற்க இயலாது. நாம் ஒருங்கிணைந்து இந்தத் தீவிர வாதத்தை எதிர்க்க வேண்டும்.

இளைஞர்கள் தீவிரவாத பாதைக்கு செல்வதைத் தடுக்க வேண்டும். டெல்லி உயர்நீதிமன்றத்தில் சமீபத்தில் நடந்த குண்டு வெடிப்பு, நாம் தீவிரவாதத்துக்கு எதிராக விழிப்பாக இல்லை என்பதையே காட்டுகிறது.


நமது உளவுத்துறையினர் சரியான நேரத்துக்கு தகவல் கொடுத்து எச்சரிக்கை செய்யாததால் டெல்லி குண்டு வெடிப்பைத் தடுக்க முடியாமல் போய் விட்டது. தீவிரவாதத்தை ஒழிக்கும் விடயத்தில் நாம் இன்னும் அதிக விழிப்புடன் இருக்க வேண்டும் என்றார்.

# பதின்ம வயதில் திருமணம் மேற்குவங்க பெண்கள் ஆர்வம்

(புருலியா)

இந்தியாவின் மேற்குவங்காள மாநிலத்தில் பதின்ம வயதில் திருமணம் செய்துகொள்வதற்கு அதிகளவு பெண்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அரசின் சட்ட திட்டங்களையும் மீறி இத்திருமணங்கள் இடம் பெற்று வருவதாக யுனிசெவ் நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



மேற்குவங்காள மாநிலத்தில் 18 வயதுக்கு முன்பே அதிக அளவில் பெண்கள் திருமணம் செய்வது நாகரிகமாகி விட்டது. இது போன்ற திருமணங்கள் 53.9 சதவீதம் நடக்கிறது என அந்த அறிக்கை கூறுகிறது.

கொல்கத் தாவில் 19.04 சதவீதம் பெண்கள் குறைந்த வயதில் திருமணம் செய்துள்ளனர். இதன் மூலம் பெண்களின் கல்வி வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு வறுமையும், வரதட்சணைக் கொடுமையுமே காரணம் என யூனிசெப் நிறுவனத்தின் மேற்கு வங்காள பிரிவின் தலைமை கள அதிகாரி லோரி கால்வோ தெரிவித்துள்ளார். இத்தகைய திருமணங்களைத் தடுக்க பெண்களுக்கு கல்வி அறிவு கொடுப்பது அவசியம். அதன் மூலம் விழிப்புணர்வு பெறும் அவர்கள் வேலை வாய்ப்புப் பெறுவர். இதனால் வறுமையும், நோய்க் கொடுமையும் ஒழியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

18 வயதுக்கு முன்பே பெண்கள் திருமணம் செய்து கொள்வதைத் தடுக்க மேற்கு வங்காள அரசும் நடவடிக்கை எடுத்துள்ளது.

# ஊழல் செய்தவர்களை சும்மா விடமாட்டோம்

**கடும் தொனியில் ஜெயலலிதா**



(சென்னை)

கடந்த ஆட்சியில் ஊழல் செய்தவர்கள் யாராக இருந்தாலும் சும்மா விடமாட்டோம். அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம் என முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

போக்குவரத்துத் துறை மானிய கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது அமைச்சர் விஜய் பேசுகையில், "கடந்த ஆட்சிக் காலத்தில் போககுவரத்துத் துறையில் மிகப் பெரிய முறைகேடு நடந்துள்ளது. இது குறித்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனிப் புத்தகமே வழங்கப்பட்டுள்ளது" என்றார்.


இந்தப் புத்தகத்தின் நகல்களை பத்திரிகையாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்று சபாநாயகர் ஜெயக்குமார் கூறினார்.

முதல்வர் ஜெயலலிதா பேசுகையில், கடந்த ஆட்சிக்க காலத்தில் போக்குவரத்து துறையில் எத்தகைய ஊழல் நடந்துள்ளது என்பதை அமைச்சர் விஜய் எடுத்துரைத்தார்.

ஆனால் எங்களைப் பொறுத்தவரை அவசரப்பட்டு செயறபடமாட்டோம். எதையுமே நன்கு சிந்தித்து, ஆற, அமர அடியெடுத்து செயற்படுகிறோம். அதனால்தான் வெற்றி பெற்று வருகிறேன். இந்தப் பிரச்சனையிலும் சீர்தூக்கிப் பார்த்து எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது குறித்து சட்ட நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஊழல் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை இந்த அரசு சும்மா விடாது. உரிய நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# மீண்டும் அல்கொய்டா அச்சுறுத்தல்

## கிலாரி கிளின்டன் எச்சரிக்கை



(நியூயோர்க்)

அல்கொய்டா தீவிர வாதத் தலைவர் ஒசாமா பின்லேடனை கொன்ற பிறகும், லண்டனில் இருந்து மும்பைவரை அச்சுறுத்தல் உள்ளது என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கிலாரி கிளின்டன் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கடந்த 2001 செப்டெம்பர் 11ம் திகதி தீவிர வாதிகள் இரட்டைக் கோபுரங்களை தகர்த்தனர். இதில் 3 ஆயிரத்துக்கும் அதிக மானோர் பலியாயினர். இதன் நினைவு தின நிகழ்வுகள் அமெரிக்காவில் அனுஸ்டிக்கப் பட்டது. இதையடுத்து அமெரிக்கா முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், மான்ஹாட்டனில் உள்ள ஜான்ஜே கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கிலாரி கிளின்டன் பேசும்போது.

அமெரிக்கர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். இதற்கான ஆதாரபூர்வ தகவல்கள் கிடைத்துள்ளன. அல் கொய்டா தீவிரவாதத் தலைவர் ஒசாமாவை கொன்றபிறகும் லண்டனில் இருந்து மும்பைவரை உள்ள முக்கிய நகரங்களுக்கு தீவிரவாத அச்சுறுத்தல் நீடிக்கிறது.

ஒசாமாவைக் கொன்ற பிறகும் லண்டன், லாகூர், மட்ரிட், மும்பை போன்ற முக்கிய நகரங்களில் அல்கொய்டா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி உள்ளது இதற்குச் சான்றாக உள்ளன. எனினும், சர்வதேச அளவில் தீவிரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தொடர்ந்து பாடுபடும். இவ்வாறு கிலாரி கூறினார்.

# லிபியாவில் மோதல் மீண்டும் தீவிரம்

உலகச் செய்திகள்

(லிபியா)

லிபியாவில் கேணல் கடாபிக்கு விசுவாசமான வலுவான மேலும் ஒரு நகரான பனிவால்த்தைக் குறி வைத்து நேட்டோ விமானங்கள் தாக்குதல்களை நடத்தியுள்ளன. குறைந்தது 5 ஏவுகணைகள் இந்த நகரை தாக்கியுள்ளதாக பிரதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கேணல் கடாபிக்கு விசுவாசமான படையினரை அந்த நகரத்தில் இருந்து வெளியேற விதிக்கப்பட்டிருந்த காலக்கெடு காலாவதியானதை அடுத்தே மோதல்கள் பாரிய அளவில் நேற்று மீண்டும் வெடித்தன. இந்த நிலையில் கடாபிக்கு எதிரான படையணியினரின் இடைக்கால நிர்வாகசபையினை லிபியாவின் நியாயபூர்வமான அரசாங்கமாக ஐ.எம்.எப். எனப்படும் சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் செய்தியாளர் சுட்டுக்கொலை ஒப்புக்கொள்கிறது அமெரிக்கப்படை

(ஆப்கானிஸ்தான்)

ஆப்கானிஸ்தானில் வைத்து பீ.பீ.சி செய்தியாளர் ஒமைத் ஃபுல்வாக்கை தாமே சுட்டுக் கொன்றதாக அந்த நாட்டிலுள்ள அமெரிக்கப் படையினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

தற்கொலைக் குண்டுதாரி என நினைத்து தவறுதலாக இவரைச் சுட்டுக் கொன்றதாக அவரது கொலை தொடர்பில் இராணுவத்தினர் நடத்தியிருந்த விசாரணையில் தெரியவந்துள்ளது.

உருஸ்கான் மாகாணத்தில் கடந்த ஜூலை மாதம் ஆப்கானிய தொலைக்காட்சி ஒன்றுக்குச் சொந்தமான அலுவலகத்துக்குள் அமெரிக்கப் படையினர் அதிரடியாக நுழைந்திருந்த தருணத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றிருந்தது.

அந்தக் கட்டடத்துக்குள் தாலிபான்கள் நுழைந்திருந்ததை அடுத்து அமெரிக்கப் படையினர் அங்கு சோதனையிட்டுள்ளனர். குறித்த இளைஞர் ஒரு கையில் ஏதோ இலத்திரனியல் கருவியை வைத்திருந்தார். இன்னொரு கையால் தனது சட்டைப் பையில் ஏதோ எடுக்க முயன்றுள்ளார்.

அவரது செயல்களைக் கண்ட துருப்பினர் அவரும் ஒரு தற்கொலைக் குண்டுதாரியோ என நினைத்து துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இவர் தனது கையில் வைத்திருந்தது கைத்தொலைபேசி எனவும், தனது ஊடகவியலாளர் அடையாள அட்டையை எடுப்பதற்காக தனது சட்டைப் பையில் கையை நுழைத்திருந்தார் என்பதும் பின்னர விசாரணையில் தெரிய வந்துள்ளது.

ஃபுல்வாக்கின் குடும்பத்தினரும், பீ.பீ.சியும் அழுத்தம் கொடுத்திருந்ததன் விளைவாக அவரது மரணம் தொடர்பாக தீவிர விசாரணை ஒன்று நடத்தப் பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# புகழுடம்பு மறையாத எலிசபெத்



(லண்டன்)

மறைந்த ஹொலிவுட் நடிகை எலிசபெத் டெய்லர் எல்லாக் காலத்துக்கும் புகைப் படத்துக்குப் பொருத்தமான முகம் உடையவர் (Photogenic Face of All the Time) எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். லண்டனில் உள்ள ஒரு புகைப்பட இணையத் தளம் நடத்திய உலகரீதியான "புகைப்படத்துக் கேற்ற முகம்" கருத்துக் கணிப்பிலேயே வாழ்நாள் அழகு முகமாக எலிசபெத் தெரிவாகியுள்ளார்.

ஹொலிவுட்டின் பிரபல நடிகர் அனிஸ்டன், பிரபல கால்பந்தாட்ட வீரர் டேவிட் பெக்காம் ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி எலிசபெத் டெய்லர் முதலிடத்தைப் பிடித்துள்ளார். 72 சதவீதமாதனோர் எலிசபெத்துக்கு வாக்களித்துள்ளனர்.

# தப்பு நடந்தால் தண்டம் தப்பிக்கொள்வது கடினம்



(லண்டன்)

பிரிட்டனில் வீதியின் கேந்திர நிலையங்களில் பொருத்தப்பட்டிருக்கும் கண்காணிப்பு கமராக்கள் அரசுக்கு அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் பிரதான நிதி மூலமாக மாறியுள்ளது. வீதி நடைமுறைகளை மீறுவோர்களை இனங்கான சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள இந்தக் கமராக்களில் இருந்து யாரும் அவ்வளவு சுலபமாக தப்பமுடியாது. அவ்வாறு மீறுபவர்களைக் கண்டறிந்து தண்டப்பணம் வசூலிக்கும் பணியை இவை செய்கின்றன.

கடந்த ஒரு மாத காலத்தினுள் 10,000 வாகனங்களிடமிருந்து தண்டப்பணமாக ரூ 600,000 அறவிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

திருநெல்வேலியில் உள்ள வீட்டிற்கு இரவு நேரக் காவலாளி தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0770303982 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ் - கொழும்பு போக்குவரத்தில் ஈடுபடும் நிறுவனம் ஒன்றிற்கு லொறிச்சாரதி ஒருவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 077 9592051 இற்கு தொடர்பு கொள்ளவும்.

**Education Technologyies** என்ற நிறுவனத்திற்கு **Marketing Excutive** (அனுபவமுள்ள / பயிலுனர்) தேவை. 30 வயதிற்கு உட்பட்ட, உயர்தர சித்தி அடைந்தவர்கள் ஆர்வமிருந்தால் 12 செப்ரெம்பர் முதல் 16 செப்ரம்பர் வரை 186, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இடம் பெறும் நேர்முகப் பரீட்சைக்கு நேரில் சமூகம் தரவும்.

சிவா நறுமணப் பூங்காவில் பொருட்கள் பொதி செய்வதற்கும்,சிட்டை பார்த்து பொதிசெய்வதற்கும் வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் கிராம அலுவலரின் சிபாரிசுக் கடிதத்துடன் இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சமூகம் தரவும். மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குழந்தை பராமரிப்பிற்கும், வீட்டுவேலை செய்வதற்றும் பணிப்பெண் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 077 9004204 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மடப்பள்ளி அனுபவமுள்ள உதவி அந்தணர் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 077 6248780, 0777 315507 இற்கு தொடர்பு கொள்ளவும்.

A) வீதி, கிளிநொச்சியில் இருக்கும் குமரகுரு மல்ரிசொப் இல் ஒப்பற்ற அடிப்படையில் பின்வரும் பணிநிலைக்கு ஆட்கள் தேவை 1) விளம்பரப் பகுதி 2) விற்பனையாளர் 3) மின் இணைப்பாளர் அனுபவமும் ஆர்வமும் உள்ளவர்கள் 15.09.2011 இற்கு முன்னதாக விண்ணப்பங்களை முகாமையாளர், குமரகுரு மல்ரி சொப், **A9** வீதி ஆனந்தபுரம் கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தனியார் மருத்துவ மனையில் 3.30 மணி தொடக்கம் 7.00 மணிவரை பணியாற்ற பெண் உதவியாளர் தேவை. **A/L** படித்த ஆர்முள்ளவர்கள் மாலை 4 மணிமுதல் 7 மணிவரை ஞாயிறு தவிர்ந்த நாட்களில் **ABC MEDICAL CLINIC, MYLANY ROAD, CHUNNAGAM** என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

**Hutch** நிறுவனத்திற்கு யாழ்ப்பாணக் கிளையில் பணியாற்ற விற்பனைப் பிரதிநிதிகள் தேவை ஆர்வமுள்ளவர்கள் 12.09.2011 முதல் 17.09.2011 வரை 9-10 மணி வரை இடம்பெறும் நேர்முகத் தேர்விற்கு 127, **Hutch Shop, K.K.S Road, Jaffna** எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

**CALTEX LUBRICANT LANKA PLC** இன் யாழ்கிளைக்கு கணக்காளர் / கையிருப்புப் பேணுதல் பணிநிலைக்கு ஆள் தேவை. ஆர்வமுள்ள ஆண்கள் 20.09.2011 இற்கு முன்னர் No. 158, **Stanley Road, Jaffna** என்ற முகவரிக்கு சுயவிபரக்கோவையை அனுப்பி வைக்கவும்.

விமலா களஞ்சியம், திருநெல்வேலிச் சந்தியில் இயங்கும் பலசரக்குக் கடைக்கு அனுபமுள்ள பணியாளர் தேவை. ஆர்வமிருந்தால் மேற்படி முகவரிக்கு நேரில் வரவும்.

ராஜா பான்சி நிறுவனத்தில் பணியாற்ற ஆர்வமுள்ள ஆண் / பொண் வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் ராஜா பான்சி 153, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அத்தியாவசிய வீட்டுப் பாவனைப் பொருட்களை வாகனத்தில் சென்று வீடுகளில் விநியோகம் செய்வதற்கு ஆட்கள் தேவை. சம்பளம் 20,000 + **Commission**. உணவுக்கு 250 தங்குமிடம் இலவசம் ஆர்வமுள்ள 18-45 வயதிற்கு உட்பட்டவர்கள் 0777 245863 இற்கு தொடர்பு கொள்ளவும்.

களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலுக்கு உதவியாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 077 4576282, 075 7194185 இற்கு தொடர்பு கொள்வும்

வெள்ளவத்தையில் உள்ள சலூன் ஒன்றுக்கு வேலை ஆட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 077 8935936, 072 5859187 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வட மாகாணத்தைச் சேர்ந்த 18-23 வயதிற்கு உட்பட்ட விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. ஆர்வமுள்ள ஆண்கள் 077 9488585 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ் போதனா வைத்தியசாலையில் இயங்கும் கண்ரீனுக்கு சமையல் மற்றும் ஏனைய வேலைகளுக்கும் ஆட்கள் தேவை. ஆவர்வமுள்ளவர்கள் நேரில் வரவும்.

தமிழில் கடிதங்கள், கவிதைகள், கட்டுரைகள் எழுதக் கூடிய ஒருவர் தேவை. ஆற்றலும் அனுபவமும் உள்ளவர்கள் 071 9364237 இற்கு தொடர்பு கொள்ளவும்.

ஆணித்தொழிற்சாலைக்கு **Machine Operator**கள் தேவை. அனுபவமிருந்தால் விரும்பத்தக்கது. அனுபவமில்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். தங்குமிட வசதி உண்டு. ஆர்வமுள்ளவர்கள் 071 4270496 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு 20-25 வயதிற்குட்பட்ட ஆண்கள் பயிற்சியளித்து சேர்த்துக் கொள்ளப்படும். பயிற்சிக்காலத்தில் சம்பளம் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 0777 316100 இற்கு தொடர்பு கொள்ளவும்.

# வலுவான பொருளாதார இலக்கு நோக்கி குடிசைக் கைத்தொழில் கண்காட்சி



மனைப் பொருளாதாரம் மற்றும் வாழ்வு எழுச்சித்திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் யாழ்.இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட குடிசார் கைத்தொழில் துறை தொடர்பான கண்காட்சியில் மக்கள் அணிதிரண்டு பார்வையிட்டனர்.

இக்கண்காட்சியில் பலதரப்பட்ட கைத தொழில் பொறிமுறைத் தொகுதிகள், இயந்திர உற்பத்திகள், கைத்தறி உபகரணங்கள் எனப் பல வகையான கைத தொழில் செயன்முறைத் தொகுதிகள் மற்றும் கழிவுப் பொருட்களினால் உற்பத்தி செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்கள், பனை உற்பத்திகள், பனம் கைப்பணிப் பொருட்கள், தெங்கு உற்பத்திகள், பற்றிக் வகைகள் மற்றும் உள்நாட்டு உற்பத்திகள் என்று பல சிந்தனையைத் தூண்டும் காட்சிப்படுத்தல்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவற்றைப் பல்வேறு மட்டத்தினரும் மிகுந்த ஆர்வத்துடன் சென்று பார்வையிட்டனர்.

அவர்களில் சிலர் தமது உணர்வலைகளை தினமுரசுடன் பகிர்ந்து கொண்டனர்.



**கு.ரஜிதா, சங்கானை**

நிரந்தர வேலைவாய்ப் பின்றி இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு இது ஓர் வரப்பிரசாதம். யாழ்.குடாநாட்டில் அழிந்துபோன கைத்தொழில், தொழிற்சாலையின்றி வெளிநாட்டு உற்பத்திகளை நாம் பயன்படுத்தி வந்தோம். தற்போது இக்கண்காட்சி மூலம் எமக்குள் இருக்கும் திறன்களையும் வெளிக்கொணர்வதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.



**வி.தர்மி, நல்லூர்.**

இதுபோன்ற உற்பத்திகள் எங்களுடைய மண்ணில் நாங்கள் இதற்கு முன்னர் பார்க்க முடியவில்லை. வெளிநாட்டு உற்பத்திகளைப் போட்டி போட்டு விற்பனை செய்யும் எங்கள் பிரதேசங்களில் இனிவரும் காலங்களில் கைத்தொழில் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு எமது உற்பத்திகளையே பெற்றுக்கொள்ளக் கூடியதாக சந்தை வாய்ப்பினை ஏற்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் என்றார்.



**எஸ்.மோகனா, நல்லூர்.**

நாங்கள் தேவையில்லை என்று கருதி எறியும் கழிவுப் பொருட்கள் மூலம் எவ்வளவு அழகான கைவினைப் பொருட்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கும் போது எங்கள் பிரதேசங்களிலும் இவ்வாறான செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும். பிளாஸ்டிக் பொருட்கள் மூலம் சூழல் மாசடையும். இயற்கையான பொருட்கள் மூலம் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்கள் மூலம் சூழல மாசடைதலைத் தடுக்க முடியும். ஒவ்வொரு இளைஞர், யுவதியும் இதுபோன்ற ஏதாவதொரு கைத்தொழிலைப் பழகுவதனால் அதிக வருமானத்தைப் பெற்று வாழ்வில் முன்னேற முடியும்.



**பாஸ்கரன், யாழ்ப்பாணம்.**

சுயதொழிலை ஊக்குவிப்பதற்கான சந்தர்ப்பம் இது.


குடிசைக் கைத்தொழில்கள் மூலம நிறையப் பயன் பெறக கூடியதாக இருக்கும்.

தற்போது வழங்கப்படும் இவ்வாய்ப்புக்களை உரிய நேரத்தில், உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். வீட்டுப் பெண்களும், கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு இது பொன்னான வாய்ப்பாகும்.

(சுமித்தி)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் கூட்டமைப்புக்குள் வலுவடையும் குழப்பம்

## சிங்கள வார இதழ் தகவல்



(கொழும்பு)

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் அரசாங்கத்தினால் அமைககபபடவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழு யோசனைத் திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் கருத்து முரண்பாடு நிலவி வருவதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கட்சியின் தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட தரப்பினர் ஒரு நிலைப்பாட்டையும், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் உள்ளிட்ட தரப்பினர் மற்றுமொரு நிலைப்பாட்டையும் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனைத் திட்டத்திற்கு சம்பந்தன் தரப்பினர் ஆதரவினை வெளியிட்டுள்ளனர்.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனைத் திட்டத்தில் கூட்டமைப்பு அங்கம் வகிக்க வேண்டுமென சம்பந்தன் தலைமையிலான தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

எனினும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது கால நேரத்தை விரயப்படுத்தும் முயற்சியாகும் எனவும், இதன் மூலம் எவ்வித தீர்வுகளையும் எட்ட முடியாது எனவும் சுரேஸ் பிரேமசந்திரன் தரப்பினர் கருதுவதாக லங்காதீப ஞாயிறு பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றாகப் பிளவடைந்திருப்பதாகவும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் கூட்டமைப்பின ரிடையே மூன்று நிலைப்பாடு காணப்படு வதாகவும் "ரிவிர" என்ற மற்றுமொரு சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

கிழக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் 24ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ.திஸாநயக்க தெரிவித்தார்.

இதனடிப்படையில் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 11 மணிவரை மொழித்திறன் பரீட்சையும் காலை 11.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை உளச்சார்புப் பரீட்சையும் இடம்பெறவுள்ளன.

# அவுஸ்ரேலியா நோக்கி சட்டவிரோத ஆட்கடத்தல்

## 40 பேர் கடலில் வைத்துக் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆட்களைக் கடத்தும் படகு ஒன்றை நீர்கொழும்புக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் வைத்து கடற்படை கைப்பற்றியுள்ளது.

நீர்கொழும்பில் இருந்து அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாக படகில் சென்று கொண்டிருந்த 40 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன், கடற்படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் டீ.டபிள்யூ.ஏ.எஸ் திஸாநாயக்க மேற்படி சம்பவத்தை உறுதி செய்துள்ளார்.

# ஜெனிவா அமர்வு எதிர்ப்பும் ஆதரவும்

## பத்து நாடுகள் இலங்கையின் பக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை அமர்வுகளில் பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன.

புலம்பெயர் தமிழ்ச் சமூகமும், மேற்குலக நாடுகளும் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை அமர்வுகளில் தீர்மானம் நிறைவேற்ற முயற்சிப்பதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்யா, சீனா, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன.

இறுதிக் கட்டப் போரின் போது இலங்கையில் உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக அமர்வுகளில் குற்றம் சுமத்த சில தரப்பினர் திட்டமிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உரிமைகள் குழு இலங்கைப் பிரதிநிதிக்கு தலைமைப் பொறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி உரிமைகள் குழுவுக்கு தலைமை தாங்கும் விசேட அதிகாரியாக இலங்கையின் ஜெனிவாவுக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதி தாமரா குணநாயகம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை அணிசேரா நாடுகள் அமைப்பு வழங்கியுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி சுவிட்ஸர்லாந்தில் இடம்பெற்ற நிகழ்வில் இந்தப் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது.

இந்தக்குழு, அரசாங்கங்களின் நடவடிக்கைகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் உட்பட்ட பொருளாதாரத் திட்டங்களைக் கண்காணிக்கும் கடமைகளைக் கொண்டுள்ளது.

இதன்படி தாமரா குணநாயகம், அரச அரசசார்பற்ற மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான இறுதி அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குச் சமர்பிக்கும் கடமையையும் கொண்டுள்ளார்.

# பற்சிதைவு; பலர் பாதிப்பு

நாட்டில் பல் சம்பந்தமான நோய்கள் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. உலக பல் சுகாதாரத் தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள ஒவ்வொருவரினதும், ஆறு பற்களாவது பழுதடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக காட்டப்பட்டுள்ளது.

# அதிகரிக்கிறது அந்நியச் செலாவணி

(கொழும்பு)

இலங்கைக்கான வெளிநாட்டு அந்நியச் செலவாணி தற்போது அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் மூலம் இந்த வருடத்தில் சுமார் 500 கோடி அமெரிக்க டொலர்கள் எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் 6 மாத காலப்பகுதியினுள் இவர்களிடம் இருந்து 250 கோடி அமெரிக்க டொலர் அந்நியச் செலவாணி வருமானம் இலங்கைக்கு கிடைத்துள்ளது .

ஏற்றுமதி மூலமான வருமானமும் 34 சத வீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மத்திய வங்கியிடம் தற்போது உள்ள வெளிநாட்டு நிதியின் பெறுமானம் 800 கோடி அமெரிக்க டொலர்கள் என மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# பணப்பரிமாற்று முகவர் நிலையங்களை மூடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை

## பொலிஸ் மா அதிபர் நிகால் இலங்ககோன்



(கொழும்பு)

சட்டவிரோதமாக வெளிநாட்டு பணப்பரிமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் முகவர் நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் நிகால் இலங்ககோன் உத்தரவிட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் இந்த நிலையங்களின் ஊடாக இலங்கைக்குப் பணம் அனுப்புவதைத் தடுக்கவே அரசாங்கம் இந்த அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இலங்கையில் சுமார் 700 சட்டவிரோத பணப்பரிமாற்ற முகவர் நிலையங்கள் செயற்படுவதாகவும், கொட்டாஞ்சேனை, புத்தளம், கறுவாத்தோட்டம், நீர்கொழும்பு, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, வவுனியா, காத்தான்குடி உள்ளிட்ட பல பகுதிகளில் இவை அதிகமாக இயங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த முகவர் நிலையங்கள் ஊடாகவே கனடா, ஜேர்மனி இந்தியா, பிரித்தானியா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் இருந்து புலம்பெயர் தமிழர்கள் தமது உறவினர்களுக்கும் பணம் அனுப்பி வருகின்றனர்.

சட்டவிரோதமாக செயற்படும் இத்தகைய முகவர் நிலையங்களை மூடுவதன் மூலம் புலம்பெயர் தமிழர்களால் அனுப்பப்படும் நிதியை ஒழுங்குபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கடந்தவாரம் புறக்கோட்டை 2 ஆம் குறுக்குத்தெருவில் இயங்கி வந்த முகவர் நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்து 84 இலட்சம் ரூபா பணத்தைக் கைப்பற்றியதுடன், அந்த வர்த்தக நிலையத்தையும் முத்திரையிட்டு மூடியுள்ளனர்.

# தீகவாவி புனிதப் பகுதியில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி

(அம்பாறை)

அம்பாறை தீகவாவி புனித பூமியில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய புனித பூமியின் பல்வேறு பகுதிகளில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

தொல் பொருள் ஆராய்ச்சி திணைக்களம் உள்ளிட்ட மேலும் சில நிறுவனங்களுடன் இணைந்து தேசிய மரபுரிமைகள் அமைச்சு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

# தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் வாக்காளர்களுக்கு அலரி மாளிகையில் விருந்து

## குற்றம் சாட்டுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

நடைபெற வேண்டிய உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் ஆளும் கட்சியானது அலரிமாளிகைக்கு வாக்காளர்களை அழைத்து அவர்களுக்கு உணவும் குடிபானங்களும் கொடுத்து திருப்திப்படுத்துவது என்பது தேர்தல் சட்டத்துக்கு முரணானது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசின் தேர்தல் சட்டமீறல்கள் குறித்து ஐக்கிய தேசிய கட்சி தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தேர்தலுக்காக அரச உடைமைகள் மட்டுமன்றி அரச அதிகாரிகளையும் பயன்படுத்திக் கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கும் தெரியும் இந்நிலையில், தேர்தல் ஆணையாளர் நாயகம் தனது முழு அதிகாரத்தினையும் பயன்படுத்தி இந்தத் தேர்தல் சட்ட மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கட்சி வலியுறுத்தியுள்ளது.

## அதிகாரி கைது

கஞ்சா தூள்கள் 111 கிலோ கிராமும் உலர்ந்த கஞ்சா 131 கிலோ கிராமும் வைத்து விநியோகித்துக் கொண்டிருந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்

இவர் மொனராகலை பொலிஸ் மோசடி ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# குவிக்கப்படும் இரும்புகளினால் போக்குவரத்துக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.புறநகர்ப் பகுதிகளில் இரும்புக் குவியல்களினால் போக்குவரத்து பாதிக்கப்படுவதாக மக்கள் குறை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மானிப்பாய், ஐந்து சந்தி, நாவாந்து, வண்ணார் பண்ணை போன்ற இடங்களை ஊடறுத்துச் செல்லும் வீதிகளின் இரு மருங்கிலும் பழைய இரும்புக் குவியல்களினால் காணப்படுகின்றன.

இதனால், அவ்வீதியால் பயணம் செய்யும் பாதசாரிகள் மிகப் பாரதூரமாகப் பாதிக்கப்படுகின்றனர். இதுதவிர, இவர்கள் வீதிகளில் வைத்து தங்களது இரும்பு வெட்டும் செயற்பாட்டினை மேற்கொள்வதனால் வீதிகள் தூசிமயமாகக் காணப்படுகிறது.

மேலும் இவ்வாறான இரும்புக் குவியல்களினால் டெங்கு போன்ற ஆட்கொல்லி நோய் பரவுவதற்கு வாய்ப்புள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எப்.எஸ்)

# ஆசன நிலை புத்தர் சிலை ஜனாதிபதியால் திறந்து வைப்பு

(கொழும்பு)

தெகிவளை புதிய பொலநறுவை கல் விகாரையில் புத்தரின் ஆசன நிலையிலுள்ள மாதிரி சிலையொன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதிய சிலை திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி புத்தர் சிலைக்கு மலர் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டார்.

வரலாற்று சிறப்புமிக்க பொலநறுவை கல் விகாரையின் மாதிரிக்கு அமையவே தெகிவளை புதிய பொலநறுவை கல் விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பொலநறுவை விகாரையின் மாதிரியைக் கொண்ட இந்த விகாரையின் செதுக்கல் பணிகள் 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது அவை முற்றாக நிறைடைந்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## மனிதாபிமான...

2007 ஜனவரி 30 ஆம் திகதி கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திலிருந்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ள கேபிள் செய்தியிலேயே இத்தகவலை பிளேக் தெரிவித்திருக்கின்றார்.

மகிந்த சமரசிங்கவுடனான மற்றொரு சந்திப்பில் இலங்கையில் செயற்படுவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களின் பட்டியல் அமெரிக்க தூதுவரால் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இது தொடர்பிலேயே தானும் ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்ததுடன், இருந்தபோதிலும், ராஜபக்ஷ சகோதரர்களான கோத்தாபய மற்றும் பசில் ஆகியோரின் செல்வாக்கின் காரணத்தினால் அது பயனற்றதாகிவிடும் எனத் தான் கருதுவதாகத் தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டின் மனித உரிமை விவகாரத்தில் சர்வதேச ரீதியான விமர்சனங்களையும் அழுத்தங்களையும் இலங்கை அரசாங்கம் அதிகளவுக்கு எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதிலும், ஜனாதிபதியும் அவரது சகோதரர்களும் வார்த்தை ஜாலங்களைக் கைவிட்டுவிட்டு அவற்றைச் செயலில் காட்ட வேண்டும் என்பதிலும் தூதுவரின் கருத்துடன் அமைச்சர் சமரசிங்கவும் இணங்கிக்கொண்டார்.

## முல்லையில்....

மீனவர்களுக்குத் தேவையான அனைத்து பொதுவசதிகளையும் கொண்டதாக இந்த மீனவ நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்

மீன் கூறி விற்பனை செய்யும் இடம், வலைகள் பின்னும் இடம், படகு இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பதற்கான இடம், மீன் விற்பனை செய்யும் இடம், மீன்பிடி பரிசோதனைக் காரியாலயம் ஆகிய வசதிகளை உள்ளடக்கியதாக இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதேவேளை, உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் நிதியுடன் நிர்மாணிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் அலுவலகமும் இன்று பிற்பகல் 3 மணிக்கு திறந்துவைக்கப் படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## கூட்டமைப்பின்.....

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் இடம்பெற்று வரும் பல்வேறு சமூக விரோத செயல்களுக்கும் ஈ.பி.டி.பி.க்கும் தொடர்புகள் இருப்பதாக தீயசக்திகள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு மக்களை குழப்பி வருகின்றனர். குறிப்பாக நல்லூரிலுள்ள சங்கிலியன் சிலை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்ட போது அது தொடர்பில் பல்வேறு செய்திகளை வெளியிட்ட உள்ளூர் பத்திரிகைகள் சில மக்களை குழப்பியிருந்ததாகவும் பின்னர் சங்கிலியன் சிலை புனரமைக்கப்பட்டதன் செய்திகளின் உண்மைத் தன்மைகளை வெளியிடாமல் இருந்ததையும் சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில் சுயலாப அரசியலுக்கு தான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன் போது யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, யாழ் இந்துக் கல்லூரி அதிபர் கணேசராஜா, நல்லூர் கல்விக் கோட்டப் பணிப்பாளர் மாணிக்கராசா, பழைய மாணவர் சங்கச் செயலாளர் டாக்டர் யோகேஸ்வரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பயங்கரவாத.....

இலங்கையின் சகல இன மக்களையும் பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட போதிலும் பயங்கரவாதத் தடை மற்றும் பிரிவினைவாதத்தை தடுக்கும் சட்டங்கள் அமுலில் இருக்க வேண்டியது அவசியமானது என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

25 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாகவும் இதனால் இச்சட்டம் அமுல்படுத்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## அழுத்தங்களை...


பல்வேறு வழிகளில் முனைப்புக் காட்டி வருகிறது. மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக ஜெனீவா சென்றுள்ள குழுவினர் நாட்டின் சமகால நிலைமைகள் குறித்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்துள்ளனர்.

இதேவேளை, பதில் வெளி விவகார அமைச்சர் டியூ.குணசேகர இந்திய அரசியல்வாதிகளிடம் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதனை முறியடிப்பதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பை திரட்டும் நோக்கில் பல்வேறு வழிகளில் இராஜதந்திர நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

## செய்திப்பாணம்

**குடிநீர் இல்லாட்டில் குவலயத்தில் வாழ்வேது**
**வடிகட்டி நிலத்தடி வடிந்திடுமாம் - குடிநீரைச்**
**சுத்தமாகப் பெற்றிட சூழலதில் கழிவறைகள்**
**பொத்தலா மகற்றல் பெறின்!**



# எதிர்க்கட்சி எம்.பிக்களின் நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லையென குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படாத காரணத்தால் அவர்கள் தமது தொகுதிகளில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கமுடியாமல் உள்ளதாக ஐ.தே.க.கட்சி குற்றஞ் சாடடியுள்ளது.

இது தொடர்பாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டீ சில்வா மேலும் தெரிவித்துள்ளதாவது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கான நிதியொதுக்கீடுகள் வழங்கப்படாமையானது கவலையளிப்பதாக உள்ளது. இதனால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதை அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி உட்பட வேலைத்திட்டங்களை மேற்கொள்ளமுடியாமல் உள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி தற்போது உரிய மாவட்டங்களுக்கு அனுபபிவைக்கப்பட்டுள்ளதாக பொருளாதார பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

# மதுபானங்கள் காட்சிக்கு வைப்பதற்குத் தடைவிதிப்பு

நாட்டிலுள்ள மதுபான விற்பனை நிலையங்களில் எவ்வித மதுபானங்களும் காட்சிக்கு வைக்கப்படக்கூடாதென மதுவரி ஆணையாளர் வசந்த ஹப்பு ஆராய்ச்சி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்குச் சுற்றுநிருபமொன்றையும் அனுப்பிவைத்துள்ளார். இதன்படி புகையிலை மற்றும் மதுசாரக் கட்டளைச்சட்ட விதியின் படி மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.

மதுபான விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு இது குறித்து அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டுமெனவும், இதனை அவர்கள் மீறினால் சட்டநடவடிக்கை எடுக்குமாறும் அவர் தனது சுற்றுநிருபத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் விலைபட்டியலும் காட்சிப் படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவிததுள்ளார்.

# இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தில், செப்ரெம்பர் 11 தாக்குதல் நினைவு



செப்ரெம்பர் 11 அமெரிக்க உலக வர்த்தக மைய தாக்குதலில் பலியானவர்களை இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் நினைவுகூர்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ம்திகதி தாக்குதலில் பலியானவர்களை இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீரியா பூட்டனிஸ் நேற்று தனது வாசஸ்தலத்தில் சர்வமத வழிபாடுகளின் மூலமாக நினைவுகூர்ந்தார்.

தூதுவரது உரையைத் தொடர்ந்து அங்கிலிக்கன் பாதிரியார், இந்து மதகுரு, பௌத்த தேரர், முஸ்லிம் மௌலவி, மற்றும் கத்தோ லிக்க அருட்தந்தை ஆகியோர் பலியானவர்களுக்காக பிரார்த்தனை களை மேற்கொண்டனர். 90 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் மக்களின் உயிர்க்களைக் காவுகொண்ட நியுயோ ர்க் வொஷிங்டன் ஷாங்ஸ்விலி மற்றும் பென்ஸில்வேனியா ஆகிய இட ங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்தும் தூதுவர் பூட்டனிஸ் நினைவு கூர்ந்தார்.

# கடற்பரப்பில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட முடியாது

SRI LANKA NAVY

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எவருக்கும் அனுமதியில்லை என கடற்படைத்தளபதி டி.டபிள்யூ.எஸ். திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து சட்ட விரோதமான முறையில் பல்வேறு முறையில் வேறு நாடுகளுக்குச் செல்வதற்கோ அல்லது உட்பிரவேசிப்பதற்கோ அனுமதி கிடையாது.

பாதுகாப்புச் செயலாளரின் ஆலோசனைக்கு அமைய நாட்டின் ஒட்டுமொத்த கரையோரப் பிரதேசத்திலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது எனவும அவர் தெரிவித்தார்.


**இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் போட்டி மழை காரணமாக டக்வேர்த் லூவிஸ் முறைப்படி சமநிலையில் முடிவுற்றது.**



**இந்தியா முதலில் துடுப்பாட்டம் 280/5 இங்கிலாந்து 48.5 ஓவரில் 270/8**

# உண்மையான அரசியல்வாதிகள் சட்டங்களை மதிக்கவேண்டும்

## கரு ஜெயசூரிய



(கொழும்பு)


சட்டரீதியானதும் நீதியுமானதுமான அரசியலில் ஈடுபடுவதன் மூலம் உண்மையான அரசியல்வாதிகள் உருவாகுவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவின் வாழ்க்கை வரலாறு அடங்கிய புத்தகத்தை மலையக மக்களுக்கு வெளியிட்டுவைத்து கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார் நாட்டின் அரசியல் சட்டரீதி யானதாகவும், நீதியானதாகவும் ஈடுபட முடியுமாயின் மாத்திரமே உண்மையான அரசியல்வாதிகளால் மாத்திரமே முன்னுக்கு வரமுடியும் என கருஜய சூரிய தெரிவித்தார்.

இத்தகையதொரு முறை நடைமுறைப்படுத்தப்பட்டால் மாத்திரமே திறமைசாலிகளுக்கு தகுதியான இடங்கள் கிடைக்கும்.

கிரிக்கெட்டை சட்டங்களுக்கு அமையவே விளையாடுவதைப் போன்று தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்படும் சட்டங்களுக்கு அமைய அரசியலில் ஈடுபட வேண்டும் என்றார்.

# மர்ம மனிதன் பீதியை ஏற்படுத்தி யாழில் திருடர்கள் கைவரிசை



மர்ம மனிதன் பீதி குடாநாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நிலையில் இதனைப் பயன்படுத்தித் திருடர்கள் அண்மைக்காலமாக பாரிய திருட்டுக்களை செய்து வருகின்றனர்.

மாலை 7 மணி தொடக்கம் இவ்வாறான மர்மமனித வதந்திகளை பரவவிட்டு கொள்ளையடிப்பதை இவர்கள் வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

ஏற்கனவே பயப்பீதியுடன் வாழும் மக்களுக்கு இந்த செயற்பாடு மீண்டும் ஒரு தலையிடியை கொடுத்துள்ளது. இதனால் மக்கள் இரவு 6 மணியுடன் வீடுகளுக்குள் முடங்கி விடுவதுடன் தங்களது அன்றாட செயற்பாடுகளை பல கஷ்டங்களுக்கு மத்தியில் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது பல ஆலயங்களில் உற்சவங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கூட இவ்வாறான திருடர்களின் செயற்பாட்டினால் ஆலயங்களுக்கு செல்வதற்கு மக்கள் தயக்கம் காட்டிவருகின்றனர்.

மேலும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கோயிலினுள் உள்ள பெறுமதிமிக்க உபகரணங்களை இவர்கள் கொள்ளையடித்து செல்கின்றனர். (எப்.எஸ்)

# நளினி, முருகனைச் சந்திப்பதற்கு மகளுக்கு விசா வழங்க ஏற்பாடு



வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராஜீவ் படுகொலை வழககின் கைதிகளான முருகன், நளினி ஆகியோரைச் சந்திப்பதற்கு அவர்களது ஒரே மகள் அரித்ராவுக்கு மிக விரைவில் விசா வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நளினி சில நாட்களுக்கு முன் மீண்டும் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். அதனையடுத்து நேற்று முன்தினம் நளினியும், முருகனும் சந்தித்துப் பேசினர்.

வேலூர் சிறையில் முன்பு நளினி ஏ வகுப்புச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஆயினும தற்போது அவருக்கு சாதாரண வகுப்புச் சிறைக்கூடமே வழங்கப்பட்டுள்ளது. எனவே அவருக்கு மீண்டும் ஏ வகுப்பு சிறை வழங்கப்பட வேண்டும் என்று சிறைச்சாலை நிர்வாகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் லண்டனில் இருக்கும் நளினி, முருகன் தம்பதியின் மகள் அரித்ரா தனது பெற்றோரைச் சந்திக்க விரும்புவதாக அறிவித்துள்ளார். அதற்கான விசாவுக்கும் விண்ணப்பித்துள்ளார். விசா கிடைத்ததும் இந்தியா வந்து தனது பெற்றோரைச் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது

# வடிகால்கள் சீரின்மையால் நீர் தேங்கும் அபாயம்

யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட சில இடங்களில் வடிகால்கள் சீரின்மையால் வெள்ளம் வடிந்தோடாமையால் பிரதான வீதியில் அருகில் உள்ள கால்வாய்கள் நீண்ட காலங்களாகத் துப்பரவு செய்யப்படாமல் இருக்கிறது, இங்கு நீர்த்தேங்கி இருப்பதனால் துர்நாற்றம் ஏற்படுகின்றது. குறிப்பாக வீதியால் பயணிப்போர் இத துர்நாற்றத்தினால் பாரதூரமாக பாதிக்கப்படுகின்றனர். எனவே இவ்விடயத்தில் மாநகரசபை உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றார்கள் (எப்.எஸ்)


# புதிய கட்டடத் திறப்பு விழா

## சிந்து எலக்ரிக்கல்

இல, 360/7, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 0773111320

* Mixer Grinders
* Rice Cooker
* Stand Fan
* Table Fan
* Air Cooler
* Water filter
* Oven

அனைத்து வீட்டு மின் இணைப்புப் பொருட்களும் மற்றும் PVE பைப்புக்களையும் சகல விதமான இலத்திரனியல் பொருட்களையும் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு இடம்



(C/570)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.